"ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

ஐப்பசி - கார்த்திகை - மார்கழி- 2001

# கலசம்
# KALASAM

இலண்டன்
அருள்தரு
ஸ்ரீகற்பகவிநாயகர்
ஆலய கும்பாபிஷேகம்
02-09-01



பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஆன்மிகக் காலாண்டிதழ்

# லக்சுமிஸ் ஜுவலர்ஸ் & சில்க் ஹவுஸ்

East Ham மஹாலக்ஷ்மி ஆலயமருகே
பிரமிக்கத்தக்க அழகுக்காட்சியறையுடன்
வைரத்தாலிக்கொடி, சங்கிலிகள், காப்புகள்,
அட்டியல்கள்,படையப்பா நெக்கிலஸ்கள்
என சகல தங்க நகைகளும்
22 கரட்டில் உறுதியானவை.





திருமணத்திற்கான சிறந்த ரககூறைச் சேலைகள்,
காஞ்சிபுரம் ரங்கோலி, கோலம், பட்டுப்புடைவைகள்

இன்னும் புதிய மிலேனியத்தில் உங்கள்
புதிய வாழ்வோடு இணைகிறது
DAKSHINOTRI (டக்ஷ்சிநோற்றி)

தரம்! தெரிவு!!
மலிவு!!!
இவையனைத்தையும் மிக
மலிவு விலையில் பெற்றிட





**LAKSHMIS JEWELLERS**
**&**
**SILK HOUSE**
**276 High Street North,**
**East Ham E12 6SA**

**Tel: 020 8470 5600**
**Fax: 020 8470 3448**

வாரத்தில் ஏழு நாட்கள்
திறந்திருக்கும்

கலசம்
KALASAM
மணி 9 ஒலி 36

# போர்களின் போர்வைகள்

உலகத்தின் ஒவ்வொரு மூலைகளிலும் சமயச் சண்டைகள் வலுப்பெற்று வருகின்றன. அமைதியை உருவாக்குவதற்காக உருவாக்கப்பட்ட சமயங்கள் அமைதியை விழுங்கிக் கொண்டிருக்கின்றன. சமயங்கள் பல பிரிவுகளாகப் பிரிந்து நானா? நீயா? உன் கடவுளா? என் கடவுளா பெரிது? என்று போரிட்டுக் கொண்டிருக்கின்றன. இச் சண்டைகளுக்குக் கடவுளின் விருப்பம் என்றும் கடவுளின் ஆணை என்றும் போர்வைகள் போர்த்தப்படுகின்றன. இங்கிலாந்தில் ஒரு நகரத்தில் கிறிஸ்தவ சமயத்தின் இரு பிரிவுகளான கத்தோலிக்கர்களும் புரட்டஸ்தாந்தினரும் முட்டிமோதி அழிந்து கொண்டிருக்கின்றனர். கட்டிடங்கள் எரிகின்றன. வாகனங்கள் எரிகின்றன. மனிதர்கள் துண்டாடப்படுகின்றார்கள். ஏன்? சமயத்தின் இயலாமையா அல்லது சமயத்தைப் புரிந்து கொள்ள முயலாமையா?

அமெரிக்கர்களும் பின்லாடனும் புனித யுத்தத்துக்கு அழைப்பு விடுக்கிறார்கள். இவர்கள் என்ன கடவுளின் பிரதிநிதிகளா? கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்குமிடையில் புனித யுத்தம் பிரகடனப்படுத்தப்படுகின்றது. எப்படி இவைகள் எல்லாம் சாத்தியமாகின்றன? சமயங்கள் எல்லாம் குருதி சிந்தித்தான் தான் உருவானவை என்ற வரலாற்றை மெய்ப்பிப்பதற்காகவா இவர்கள் இப்படி எல்லாம் செய்கின்றார்கள். மானிடம் இவர்களிடம் செத்துப் போயிற்றா? ஆன்மிகத்தை இவர்கள் எல்லோரும் சேர்ந்து குழிதோண்டிப் புதைத்துவிட்டார்களா? இன்று உலகில் நடைபெறும் போர்கள் மீதெல்லாம் சமயப் போர்வைகள் போர்த்தப்படுகின்றன. சமயங்கள் மனிதனது ஆன்மபலத்தைக் கூட்டுவதற்குப் பதிலாக குறைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனவா?

வெறும் கிரியைகளாலே பின்னப்பட்ட இம் மதங்கள் அவற்றுள்ளே அமிழ்ந்துபோய் இறைவனைப்பற்றிய உயரிய உணர்வுகளை எல்லாம் விழுங்கி மானிடனை அழிக்கும் பணியி-ல் ஈடுபட்டுவிட்டனவோ என ஐயுற வைக்கின்றது.

சமயங்கள் எல்லாம் சாத்தானின் உறைவிடங்களாக மாறிவிட்டதும் ஆன்மீகத்தின் ஆணிவேர்களை அறுத்தெறிந்துவிட்டு முன்னுக்குவர ஆரம்பித்துவிட்டதும் நல்ல சகுனமல்ல. அழிவே விடையாகவும் முடிவாகவும் போகப்போகிறது.
இப்போ இறைவன் பூமிக்கு வரவேண்டும் .
வருவாரா????

ஆசிரியர்

# உள்ளே......

ஆசிரியர் தலையங்கம்.... 1
உள்ளே........2
மாணிக்கவாசகரை........3
விளம்பரம்........13
வல்லிபுர ஆழ்வார்.......14
ஐயம் தெளிவோம்........16
சிறுவர் கலசம்.......17
இளைஞர் கலசம்.......21
Junior-Senior....24
சைவப்பெரு நெறியைக்...26
திருவைந்தெழுத்து.....28
விளம்பரம்.......29
ஆகம நெறித்தமிழ்.....30
முத்துமாரியம்மன் ஆலயம்...34
சந்தாவிபரம்.....35
Science and saivam 36
எனது பக்கம்....38
(ஒரு குளிர்மையான ஈழப் பயணம்)

**ஆசிரியர்**
மு. நற்குணதயாளன்

**துணை ஆசிரியர்**
திரு சி. அற்புதானந்தன்.

**2, Salisbury Road**
**Manor Park**
**London**
**E12 6AB**

**Tel: 0208 514 4732**
**Tel: 0208 573 0368**

நிர்வாகம்: திரு வ.இ. இராமநாதன்
உதவிநிர்வாகம்: திரு சிவ அசோகன்
நிர்வாகக் குழு: டாக்டர் ந. நவநீதராசா
திரு ச. சிறீரங்கன்
திரு சு. வைத்தியநாதன்
திரு ச. யோகநாதன்
திரு. சி. தர்மலிங்கம்
திரு ந. சிவராசன்
திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம்

# மாணிக்கவாசகரை அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராக சேக்கிழார் உள்ளடக்காதது ஏன்?

திருமதி. தனபாக்கியம் குணபாலசிங்கம்

சேக்கிழார் அநபாயச் சோழன் எனும் சிறப்புப் பெயரைக் கொண்டிருந்த இரண்டாம் குலோத்துங்க சோழனின் (கி.பி133-1150) அமைச்சராகப்

**சோழ அமைச்சரான சேக்கிழார் பாண்டியருக்குச் சைவமும் தமிழும் வளர்க்கச் சிவன் உடனாய் இருந்தான் என்று மாணிக்கவாசகர் போற்றியிருந்தமையை இயல்பாகவே வெறுத்தார்.**

பணிபுரிந்தவர். மன்னனின் விருப்பத்திற்கிணங்க சைவ நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறுகளை 4550 செய்யுட்களில் தொகுத்தளித்தவர். இந்நூல் இன்று பெரியபுராணம் அல்லது திருத்தொண்டர் புராணமென அழைக்கப்படும் நூலாகும். ஆனால் இத்தகை பெருநூலிற் சேக்கிழார் மாணிக்கவாசகரை உள்ளடக்கவில்லை. இவருக்கு மாணிக்கவாசக ருடன் தொடர்பான சமயக் கருத்து வேறுபாடு களைத் தெளிந்து முடிவெடுக்கப் போதிய கால அவகாசம் இருந்தது.

அத்துடன் இவருக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே சைவசமய உலகம் மாணிக்கவாசகரைச் சிவனடியார் எனவும் அவரது பாக்களை அருள் திருவாசகம் எனவும் மதித்திருந்தது. எனினும் முதலாம் இராசராச சோழன் (கி.பி 985 – 1016 ) மூவர் தேவாரங்களை திருமுறைகளாகத் தொகுக்கும்படி நம்பியைப் பணித்த பொழுது, நம்பி தில்லையில் மூவர் தேவாரங்கள் ஓர் அறையில் பூட்டியிருக்கக் கண்டார் என்பது மூவர் தேவாரங்களைத் தேடியெடுத்த வரலாறு கூறும். ஆனால் வேறோர் சந்தர்ப்பத்தில் நம்பியாண்டார் நம்பி மாணிக்கவாசகரையும் அவரது நூல்களையும்

வருவா சகத்தின் முற்றுமுணர்ந் தோனை வணதில்லை மன்னனைத்
திருவாத வூர்ச்சிவ பாத்தியன் செய்திருச் சிற்றம் பலப்
பொருளார் தருதிருக் கோவைகன் டேயு மற்றப் பொருளைத்
தெருளாத உள்ளத்தவர் கவி பாடிச் சிரிப்பவரே

**(கோவில் திருப் பண்ணியர் விருத்தம்)**

என்று குறிப்பிடுவாரேயொழிய இந்நூல்கள் அவர் கைக்கு எங்கிருந்து கிடைத்தனவெனக் குறித் தாரில்லை. அதனோடு திருவாசகத்தை எட்டாம் திருமுறையாகத் தாம் வகுத்ததாகவும் குறிப் பிட்டிலர். ஆனால் கோவையில் மறை பொருளாக வைக்கப்பட்ட ஞான நுண்பொருளை விளங்க முடியாதவரே அதனைக் காமநூலாகக் கருதிக் கவிபாடிச் சிரிப்பர் என்று குறிப்பாகச் சுட்டியதனால் நம்பி திருக்கோவையின் ஞானப்பொருளை உணர்ந்திருந்தார் என்பது தேற்றமாம். ஆயினும் கோவையைக் கவிபாடிச் சிரிப்பிக்கும் நிலை இருந்தபடியால் நம்பி கோவையை எட்டாம் திருமுறையில் தொகுக்கத் துணியவில்லையென்று தெரிகின்றது. அதனால்

உமாபதி சிவாசாரியார் (கி.பி1300) தமது திருமுறை கண்ட புராணத்தில்

ஆகவளர் திருமுறையே முருட்டிருவா
சகமொன்றும் (செய்-26)

என்று குறிப்பிட்டுத் திருவாசகமே எட்டாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டிருந்ததென்பர். இத்திரு முறைத்தொகுப்பு சேக்கிழார் காலத்திற்கு முற்பட்ட நிகழ்ச்சியாகும்.

எனவே எட்டாம் திருமுறையாகத் திருவாசகம் தொகுக்கப்பட்டதாயின் மாணிக்கவாசகருக்குரிய இடத்தைச் சேக்கிழார் பெரியபுராணத்தில் கொடுத்திருக்கவேண்டும் அல்லவா? கோவைக்கு உரைகண்ட பேராசிரியரும் சேக்கிழாருக்கு முற்பட்ட காலத்தவரே. பேராசிரியர் கோவையில் கரந்து வைக்கப்பட்டுள்ள ஞான நுண்பொருளை உணர்ந்து உரைகூறுதல் தமக்கியலாமையால் தாம் உலகியல் வழக்கான ஐந்திணையொழுக்க நெறிப்படியே உரைவகுக்க முடிந்த தென்பதனை,

**திருவாத வூர்மகிழ செழுமறைமுனிவர்**
**ஐம்பொறி கைமிகந் தறிவா யறியாச்**
**செம்புலச் செல்வராயின ராதலி**
**னறிவனூற் பொருளுமுலக நூல் வழக்குமென**
**விருபொருளு நுதலியெடுத்துக் கொண்டனர்**
**ஆங்கவ் விரண்டனுள்ஆகம ஞான**

**யோகநுண் பொருளினை யுணர்த்து தற்கரிய**
**துலகநூல் வழிமி னுதலிய பொருளெனும்**

என்று குறிப்பிடுவதால் நாம் உணர முடியும். மேலும் பேராசிரியர் தமது காலத்திற்கு முன்னரே கோவையை உயிரின் இருளை அறுக்கவல்ல அருள் நூல் என்று கருதியோர் இருந்தனர் என்பதனை

**அருள்வயிற் சிறந்த அகத்தினை மருங்கின்**
**இருளறு நிகழ்ச்சி இவையென மொழிப**

என்று குறிப்பிடுவர்.

இனிப் பிற்காலத்தில் சைவசமய நெறிகளைப் புதுமைப்படுத்திய ஒளவையார் முதலாம் குலோத்துங்க சோழன்( கி.பி 1070–1120) காலத்தில் வாழ்ந்தவராகக் கருதப்படுகின்றார். இருவரும் கோவையையொதுக்குவோர் நிலைகண்டு அதன் உண்மையை மற்ற நூல்களுடன் ஒப்பிட்டு

**தேவர் குறளும் திருநான்மறையு முடிவும்**
**மூவர் தமிழும் மனிமொழியும்–கோவை**
**திருவாசகமும் திருமூலர் சொல்லும்**
**ஒருவாசகமென்றுணர்**

என்பர்

இவ்வாறு சேக்கிழாருக்கு முற்பட்டோர் கோவையின் உண்மையை ஆராய்ந்து தெளிந்திருந்தனர். எனவே பல நூற்றாண்டுகளாகச் சைவசமய உலகில் மாணிக்கவாசகரின் கோவை பற்றிய கருத்துக்களைச் சேக்கிழார் அறிந்திருந்தார் என்பதில் ஐயமில்லை. எனவே சேக்கிழாருக்கு கோவை மீது புதிய ஆய்வுகளுக்கும், சீர்தூக்கல்களுக்கும் இடமிருக்கவில்லை. எனவே மாணிக்கவாசகரைப் பெருமைப்படுத்த வேண்டிய பொறுப்பினைக் காலம் இவருக்கு கையளித் திருந்தது. அதாவது சுந்தரரின் திருத்தொண்டத் தொகையையும் நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியையும் கண்மூடித் தனமாகப் பின்பற்றாது, சைவ நாயன்மார் வரலாற்றைப் புதுமைப்படுத்தவேண்டிய கால கட்டத்தில் சேக்கிழார் இருந்தும் காலத்தையும் சந்தர்ப்பத்தையும் பயன் படுத்தவில்லையே. அதாவது அறுபத்து நான்கு நாயன்மார் வரலாறாகப் பெரியபுராணத்தை இவர் உருவாக்கியி ருந்திருப்பாரேயானால் சேக்கிழார் இப்பணிக்காக அழியாப் புகழையீட்டியிருப்பார். சைவசமய உலகின் மாமனிதராகப் போற்றப்பட்டிருப்பார். ஆனால் மனிதசாதிக்குரிய குரோதக் குணங்கள் சேக்கி ழாரையும் விட்டு வைக்கவில்லை. அதனாலேயே நாம் எதிர்பார்க்கும் நற்பணியை அவர் செய்யமுடியாது போயிற்று. இனிச் சேக்கிழார் குரோத குணங்களை ஏன் கொண்டிருந்தார் என் பதற்கான காரணங்களை நோக்குவோம்

முதலாவதாக சேக்கிழார் சோழமன்னனின் அமைச்சராகப் பணியாற்றியவர். எனவே சோழக் குடிப்பெருமைகள், சைவநற்பணிகள் ஆகியவற்றை முடியுமானவரை மேன்மைப்படுத்த வேண்டிய கடப்பாடுடையவராக இருந்தார். மாணிக்கவாகர் பாண்டியர் அமைச்சராகப் பணிபுரிந்து, துறவு வாழ்க்கையேற்றவர். அவர் சிவனைப் போற்று கையில் பாண்டியனாகவே பாவனை பண்ணி யிருந்தார். அதனால் பாண்டியரே சைவத்திற்கும், தமிழிற்கும் கூடிய உருத்துடையவராகப் போற்றப்படலாயினர். அதனோடு சிவனருள் பெற்ற பாண்டியருக்காகச் சோழர் போரில் காணும்வகையில் பல திருவிளையாடல்களைச் சிவன் செய்திருந்தார் எனப்போற்றுவார். எடுத்துக்காட்டாகச்

**சிவனையேபாண்டி நன்நாடர்( அன்னைப்பத்து)**
**பாண்டிப்பிரான்(திருப்பாண்டிப் பதிகம்)**

தென்பாண்டி நாடனைக் கூவாய்( குயிற்பத்து)
பரிமேற்கொண்ட பாண்டியனார்( திருப்பாண்டிப்பதிகம்)
பாண்டிநன்னாடுடையான் படையாட்சிகள் பாடும் ஆகாதே( திருப்படையாட்சி)
பரம் பாண்டியனார் (திருப்பாண்டிப்பதிகம்)
பெரிய தென்னவன் மதுரையெல்லாம்( ஆனந்தமாலை)
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே( சிவபுராணம்)
பாண்டி நாட்டைப் பழம் பதியாகத்
(கீர்த்தித் திருவகவல்)
அப்பாண்டி நாட்டைச் சிவரோகமாக்குவித்த (திரு அம்மானை)
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானை( திரு அம்மானை)

என்று போற்றி பாண்டி நாட்டைச் சிவலோகமாக்கியும், தமிழையாந்து பாண்டியருக்கு அறிவூட்டியவனாகவும் காட்டுவார். மேலும் சிவவாழ்க்கை வாழ்ந்த பாண்டியருக்கே சிவலோகமாகிய பரகதியை அருளினார்.

என்பதனை நரகொடு சுவர்க்கம் நானிலம்புகாமல் பரகதி பாண்டியருக் கருளினை போற்றி. (பேற்றித் திருவகவல்)

இவையெல்லாம் எமக்குணர்த்துவன என்ன? பாண்டியரே மேன்மையான குடியினர் என்பதாம். சோழரும் சைவம் பேணிய தமிழரே. ஆனால் அவர்கள் சைவப் பெருமையோ தமிழ்ப் பெருமையோ பாண்டியர் முன் ஈடுகொடுக்க முடியவில்லை. அதனால் போட்டிகளும் பூசல்களும் சங்ககாலம் முதலாகவே இவர்களிடையே நிலவி வந்தன. தொல்காப்பியர் வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு என மூவேந்தரைப் பெருமைப்படுத்தினாலும் இவர்களிடையே பகையும் போரும் தவிர்க்க முடியாதனவாய் இருந்தன என்பதனைச் சங்க இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. கடைச் சங்ககாலத்து பாண்டிய மன்னான நெடுஞ்செழியன் மீது கிள்ளிவளவன் எனும் சோழன் படையெடுத்து வந்தபொழுது பாண்டியன் படை சோழர் படையைத் தோற்கடிக்கச் செய்ததோடு சோணாட்டின் பெரும்பகுதியை பாண்டி நாட்டுடன் இணைத்தது. பின்னர் இந்நெடுஞ்செழியனுக்கும் சேரன், சோழன், திதியன் முதலானோர் கூட்டுப்படைக்குமிடையே தலையாலங்கனத்தில் நடந்த போரில் செழியனே வெற்றி பெற்றான். ஆனால் நலங்கிள்ளி எனும் சோழன் பாண்டி நாட்டின்மீது படையெடுத்துப் பாண்டியர் ஏழு அரண்களைக் கைப்பற்றிப் புலிக்கொடியையும் நாட்டினான் எனத் தெரிகின்றது. இவ்வாறு சைவத்தையும் தமிழையும் பேணியவர்களான பாண்டியரிடையும் சோழரிடை யுமிருந்த உட்பகை தொடர்ந்திருந்தது என்பதற்கு வரலாறு சான்று பகரும்.

இடைக்காலப் பாண்டியர்களான முதலாம் வரகுணன், ஸ்ரீ மாறவல்லபன், இரண்டாம் வரகுணனின் காலத்தில் பல்லவர், சோழர், கங்கர், முதலான கூட்டுப்படைகள் பாண்டியருக்கெதிராகப் பெரும் போர்கள் நிகழ்த்தியிருந்தனர்.

முதலாம் இராசராசனின் விருதுப்பெயரான பாண்டிய குலாசனி இப்பகைமையின் நீடிப்பை அரண்செய்யும். இப்படியான உயர்வுதாழ்வு உணர்வுகள் இவர்களது அமைச்சர்கள் மீதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வந்துள்ளன. இந்தப் பின்னணியிலேதான் மூவர் தேவாரங்களைப் பெருமைப்படுத்திய முதலாம் இராசராசன் மாணிக்கவாசகரைப் பெருமைப்படுத்த வில்லையெனலாம். ஆனால் முதன் முதலாக வீரேந்திர சோழனே(கி.பி 1063-1069) தில்லை நடராசப்பெருமானிடம் பக்தியுடையவனாக இருந்த மையால் தில்லைச் சோதியுள் இரண்டறக் கலந்த மாணிக்கவாசகர் சிவ வாழ்க்கையை நினைவு கூருமுகமாகத் திருவெம்பாவை, திருச்சாழல், ஆகிய திருவாசகப் பாடல்களைக் கோவில்களில் திருமுன்னர் விண்ணப்பம் செய்ய ஏற்பாடு செய்திருந்தான் எனக் கல்வெட்டுக்கள் குறிப்பி டுகின்றன. இவனுக்குப் பின் ஆண்ட சோழர்களில் முதலாம் குலோத்துங்கனின்(கிபி-1070-1120) மகன் விக்கிரமசோழன்(கிபி- 1118-1136) தில்லையில் மாணிக்கவாசகரின் திருச்சாழல் பதிகம் பாடுவதற்கும் திருவானைக்கா கோவிலுக்குமாக நிலங்கள் விட்டிருந்தான். இந்த விக்கிரமசோழனின் மகனே இரண்டாம் குலோத்துங்க சோழன் ஆவான்.( கி.பி 1113-1150) இவன் தந்தை மாணிக்க வாசகரைப் போற்றுமுகமாகச் செய்த திருப்ப ணியைத் தொடர்ந்ததாகச் சான்றுகள் இல்லை. ஆனால் இவன் மூவர் தேவாரங்களைச் செப்பேட்டில் வரைவித்து தில்லையில் வைத்ததோடு, சோழர் குலத் தெய்வமான திருவாரூர் கோவிலிலிருந்த தேவாரசிரியர் திருவு ருவங்களின் பூசைக்கு ஒழுங்குகளையும் செய்திருந்தான். இவன் அமைச்சரான சேக்கிழாரே இவற்றை முன்னின்று நிறைவேற்றுவித்திருப்பா ரெனில் தவறாகாது.

மற்று சேக்கிழார் ஒரு பழமைவாதியாகவும் சீர்திருத்தங்களை விரும்பாது பழைமைப்

போக்குகளையே அடியொற்றிச் செல்லும் மனிதராக இருந்திருப்பின் சுந்தரர் திருத்தொண்டர் தொகையில் தவிர்த்திருந்த மாணிக்கவாசரை நம்பியாண்டார் நம்பியும் திருத்தொண்டர் திருவந் தாதியில் உள்ளடக்க முன்வராதவிடத்துப் பழைமையைப் பேணுவதே தம்கடமையாகக் கருதியிருக்கலாம். ஆயினும் இவர் அத்தகையதொரு பழைமைவாதியல்ல என்பதனை அவரது கூற்று மூலம் உணரலாம். ஏனெனில் பெரியபுராணத்தில் திருமலைச்சிறப்புப் படலத்தின் இறுதிச் செய்யுளில் சோழ நட்டில் பிறந்தவர்களின் துதிப்பாடல்களையே இத்தொகுப்பில் கூற விருந்தோம் என்று கூறியது அவரது உள்ளக் குறுகுறுப்பினாலேயாம். ஏனெனில் தம்முடைய தொகுப்பில் மாணிக்கவாசகரை உள்ளடக்காதது ஏன்? என்று என்றைக்கோ ஒரு நாள் சைவசமய உலகம் குரல் எழுப்பும் என்று அவருக்குத் தெரிந்திருந்தது. அதற்குப் பதிலாகவே அவரது இக்கூற்று அமைந்திருந்தது. ஆனால் உண்மையை ஆராய்வோர், அவர் உண்மைக்கு முரணானவகையிலேயே சைவமக்களைத திசை திருப்பியிருந்தார் என்று உணர்வார். பெரிய புராணத் தொகுப்பிலும் சுந்தரர் தொகுத்த 63 நயன்மார்கள் மட்டுமே உள்ளடக்கப்பட்டிருந்தனர். இந்நயன் மார்களுள் சேக்கிழார் குறிப்பிட்டது போல் எல்லோரும் சோழநட்டினர் அல்ல என்று எமது ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஐயடிகள் காடவர்கோன், கழற்சிங்கர், ஆகியோர் பல்லவமன்னர்கள் ஆவர். சேரமான் பெருமாள் நயனாரும், விறல் கண்டநயனாரும், சேரநட்டவர் ஆவர். கூற்றுவநயனர் சிவன் திருவருளால் பாண்டி நட்டைக் களப்பிரரிடமிருந்து கைப்பற்றியாண்டவர். ஆனால் இவர் தொண்டைநட்டுக் காப்பாளர் (வேளார்) குலத்தவர் ஆவர். நின்றசீர் நெடுமாறன் கூற்றுவநயனாருக்குப் பின் பாண்டிநட்டை ஆண்ட பாண்டியர்குலத்தில் வந்த நேசநயனார் கர்நடக நட்டவர். வேணாட்டடிகள் திருவாங்கூர்ப் பகுதியைச் (வேள்நடு) சேர்ந்தவர். எனவே சோழர்குலத்தல்லாதோர் எனத் தவிர்க்கப்பட்டோர் மாணிக்கவாசகரும், கோவையைத் தழுவி கல்லாடம் எனும் நூலைப்பாடிய கல்லாடரு மேயாவார். மேலும், மாணிக்கவாசகர் பாண்டிய நட்டவர் என்பது உண்மையே. ஆனால் இறைவனின் திருவருட் குறிப்பு அவரது பாவை பாடிய வாயால் கோவையைப் பாடுவித்து தில்லையில் ஆட்கொள்வதேயாம். அதனால் மாணிக்கவாசகரை முற்றாகப் பாண்டியர் என்று கருதுவதும் பொருத்தமற்றதாகும். எனவே சேக்கிழார் திருமலைச் சருக்கத்தில் குறிப்பிட்டது ஒரு வெள்ளோட்டமான கூற்று என்பது புலனாகும்.

இனி மாணிக்கவாகரின் திருக்கோவையார் பற்றிய கருத்துக்கள் அன்றைக்கும் இன்றைக்கும் கூடப் பலதரப்பட்டனவாகலாம். படிப்போர் தகுதிக்கேற்ப கோவையை

**ஆரணங் காணென்ப ரந்தணர் யோகியராகமத்தின்**
**காரணங் காணென்பர் காமுகர் காமநன்நூலிதென்பர்**
**ஏரணங் காணென்ப ரெண்ணர் எழுத்தென்பரின் புலவோர்**
**சீரணங் காணசிற்றம்பலக் கோவையைச் செப்பிடினே**

எனப்பொருள் கொண்டனர் என்பதனால் இதன் ஆகமப்பொருளின் பெருமையை எல்லோரும் போற்றவில்லையென்பது தெளிவாம் இவ்வாறு திருக்கோவையாரை அகப் பொருளியலுக்கு மாறுபட்ட காமநூல் என்றோருக்காகக் கல்லாடர்( கி.பி-600) திருக்கோவையுள் கரந்து வைக்கப்பட்ட ஞான நுண்பொருளை புலப்படும்படி, திருக்கோவையினின்றும் 100 பாடல்களைத் தெரிந்தெடுத்து அவற்றின் பொருளைக் கல்லாடத்தில் வைத்துப்பாடி அரங்கேற்றிய பொழுது மாமதுரை ஈசர் ஒவ்வொரு பாடலுக்கும் திருமுடிஅசைத்து மெச்சினார் என்பதனை

**கல்லாடர் செய்பனுவற் கல்லாட நூறுநூல்**
**வல்லார்சங்கத்தில் வதிந்தருளிச்-சொல்லாயும்**
**மாமதுரை ஈசர் மனமகிழ்ந்து கேட்டு முடி**
**தாமசைத்தார் நூறுதரம்**

எனும் வெண்பா குறிப்பிடும். ஆனால் இக்கல்லாடமும் கோவையைப் பின்பற்றி அகத்துறையைப் பாடியதென்பதனாலே திருமுறைத் தொகுப்பில் தொகுக்காமல் விடப்பட்டதாகத் தெரிகின்றது.

இத்தகைய கருத்துவேறுபாடுகள் கோவைமீது எழுவதற்கும் இது முழுமையான ஞான நுண்பொருளைக் கொண்டிருக்காமைக்கும் மூன்று

காரணிகள் பின்னணியில் இருந்தன. முதலாவதாக மாணிக்கவாசகர் திருவாசகத்தைப் பாடும்பொழுது, தனது உலகியல் சிற்றின்ப ஈடுபாடுகளுக்கும் இறையருளாகிய பேரின்பத்திற்கும் இடையே தமக்கிருந்த மனப்போராட்டங்களையும், துன்பங்க ளையும் வெளிப்படையாக

இருதலைக்கொள்ளியினுள் எறும்பொத்து நினைப்பிரிந்து
எறும்பிடை நங்கூழ் எனப் புலனால் அரிப்புண்டலந்த
ஆனைவெம்போரிற் குறுந்தாறெனப் புலனால் அலைப்புண்டேனை

என எடுத்துக் கூறியுள்ளார். இரண்டாவதாகக் கோவை பாடும்படி இறைவன் பணிக்கையில் இவர் உலக எண்ணங்களற்றவராய் இறைவனுடன் ஒன்றித்துத் தன்னிலையற்றிருந்தார். இத்தகைய நிலை இதற்கு முன்னரும் இவருக்கு இருந்ததென்பதனை

எனை நன் என்பதறியேன் பகல் இரவாவதும் அறியேன்
மனவாசகங்கடந்தான் எனை மத்தோன் மத்தன் ஆக்கி
அறவே நினைச் சேர்ந்து அடியார்
மற்றொன்றறியாதார் (திருச்சதகம்)

எனும் இவர் கூற்றுக்களால் நம் உய்த்துணரலாம். எனவே கோவையில் குற்றம் காண்பதாயின் மாணிக்கவாசகரைப் பித்தனாக்கிப் பாடுவித்த இறைவன்மீதே குற்றம் காணவேண்டும். மூன்றாவதாக காமஞ்சான்ற ஞானப் பனுவலாக உருவாவதற்குரிய கடைச்சங்க இலக்கிய அகத்துறைக்கும் சிவனே இலக்கணம் அமைத்துக் கொடுத்தார் என்று சைவமரபுகள் கூறுகின்றன.

கடல்கோள்களுக்கு முற்பட்ட பொதிய மலைச் சங்கம், மகேந்திரமலைச் சங்கம் என்பனவற்றிலும் சிவனும் முருகனும் பாண்டியருக்கு அறிவு புகட்டுவதற்காகத் தமிழ் ஆராய்ந்திருந்தனர். பின் தென்மதுரை கபாடபுரம், என்பன கடல் கோள்களினால் அழிவுற்ற பின் எஞ்சிய உயிர்கள் உய்தற்பொருட்டு சிவன் வடமதுரையில் திருவாலவாயில் கடம்பமரத்தடியில் லிங்கமாகத் தோன்றி வெள்ளியம்பலத்தில் திருக்கூத்தையும் நடத்தி பாண்டியர் குலம் தழைக்கத் திருவிளையாடல்களைச் செய்திருந்தார் எனப் பரஞ்சோதி திருவிளையாடற் புராணம் கூறும். மேலும் மலையத்துவச பாண்டியன் செய்த யாகத்திலும் உமை தடாதகைப் பிராட்டியாகத் தோன்றி வளர்ந்திருக்கையில், சிவனே அவளைத் திருமணம் செய்த பாண்டியர்குலம் அற்றுப் போகாமல், செங்கோல் முறைசெய்ததனால் மூவேந்தருள் பாண்டியர் குடியே சிவ வாழ்க்கை வாழ்க்கையில் மேம்பட்டிருந்தனர் என்றும் பின் பாண்டியர் குடியற்றுப் போகாமல் இருப்பதற்காக முருகக் கடவுளைத் தடாதகைப் பிராட்டியிடம் அவதரிக்கச்செய்து உக்கிரவர்மன் எனப் பெயரிட்டு அவருக்கு வேலம்புத்தூரில் வேற்படையை நல்கி அருள் பாலித்தார் என்றும் சிவன் திருவிளையாடல்கள் தெரிவிக்கின்றன. பின்னர் கடைச்சங்கத்தார் தமிழ் ஆய்கையிலும் சிவனும் முருகனுமே பாண்டியர்க்கறிவு புகட்டியிருந்தனர் என மரபுகள் தெரிவிக்கின்றன. அத்தருணம் உலகத்தின் இயக்கத்திற்கு இலக்கணமாக அமையும் அகப்பொருட்கூறு, ஒரு பஞ்சத்திறலிறத்தால் பாண்டியனும் கடைச்சங்கப் புலவரும் பொருளதிகாரம் காணவல்லாரைக் காணாது கவலையுற்றிருக்கையில் ஆலவாய்க் கடவுள் அது தானும் ஞானத்தினுடையதாகலான் யாம் அதனைத் தீர்த்தல் வேண்டுமெனக் கருதி அன்பினைந்திணை எனத்தொடங்கி அறுபது சூத்திரங்களை செய்து திருவாலவாய் பீடத்தின் கீழிட்டான். பீடத்தின் கீழ் என்றும் அலகிடாத பூசகர் அன்று அலகிட்டார். அப்பொழுது ஒரு ஏடு வெளிவந்தது. அது பொருளதிகாரமாக இருக்கக் கண்டு மன்னனுக்கு தெரிவித்தார். மன்னனும் மகிழ்ச்சி அடைந்தான். இதற்கு உரைகாணுவதிலும் இறைவன் திருவிளையாடலே செய்தான். இடையாமத்தில் உப்பூரி குடிகிழார் மகன் உருத்திரசர்மன் மூங்கையனாகையால் மெய்ப் பாட்டால் சிறந்த உரையைத் தெரிவிப்பான் என அசரீரி வாக்குக் கேட்டது. களவியலுக்குக் கிடைத்த உரைபற்றிப் பாயிரம் முருகக் கடவுளாகிய உருத்திரசர்மன் சங்கப்புலவர்கள் இயற்றிய களவியலுரையைக் கேட்டவிடத்து வாளாவிருந்து, மதுரை மருதனிளநகனார் உரைத்தவிடத்து ஒரேவழிக் கண்ணீர் வார்ந்து மயிர்க்கூச்செறிந்து நிறுத்திப்பின் கணக்காயனார் மகன் நக்கீரர் உரைத்தவிடத்துப் பதந்தோறுங் கண்ணீர்வார்ந்து மெய்மயிர்சிலிர்ப்ப இருந்தான்.

இருப்ப ஆர்ப்பெடுத்து மெய்யுரை பெற்றாம். இந்நூற்கென்றார் எனக்கூறும். பின் முதற்சூத்திர உரைக்கண் மதுரை ஆலவாயிற் பெருமானடிகளாற் செய்யப்பட்ட நூற்கு நக்கீரனால் உரைகண்டு குமாரசுவாமியாற் கேட்கப்பட்டது என்ற குறிப்பு முளது. இக்குறிப்புக்களிலிருந்து உலக இயக்கத்திற்கு இலக்கணமாக அமையும் அகப்பொருள் இலக்கணத்தைச் சிவனும் முருகனுமே கடைச்சங்கத்தாருக்கு உணர்த்தினர் என்பது உணரற்பாலது.

இத்தகைய நேக்கிலே திருக்கோவையாரும் பாடுவிக்கப்பட்டதாகும்.

உயிராகிய தலைவி(மாணிக்கவாசகர்) கடவுளாகிய தலைவனைப் பல துன்பங்களையும் சோதனை களையும் கடந்து கூடுதலே கோவையின் கருப்பொளாகும். பாட்டுடைத்தலைவன் சிற்றம்பல முடையான், உயிராகிய தலைவி நிலையில்லாச் சிற்றின்பங்களை அனுபவித்துப் பேரின்ப நெறியைத் துச்சமாக கருதியிருந்தது. இந்நிலையில் உலக போகங்களை அனுபவித்திருந்த மாணிக்க வாசகரைத் தலைவனாகிய இறைவன் குறிக்கொண்டு ஆட்சி கொண்டான். இவ்வாட்சிக்குப் பின் உயிராகிய தலைவி பலசோதனைகளின் பின் இறைவனுடன் கூடி இன்பம் சுகித்திருப்பதாகக் கோவை விபரிக்கும் இதில் உணர்த்தப்பட்ட ஒவ்வொரு அகத்துறையும் இறைவனுக்கும் உயிருக்குமுள்ள தொடர்பினை உலகியல் வழக்கில் குறிப்பாக உணர்த்தப்பட்டதாம். ஒவ்வொரு செய்யுளும் காதலரைச் சிவமும் சக்தியுமாகப் பாவனை பண்ணும் களவுப்பகுதியில் உயிர் கடவுளின் காட்சியைப் பெறத்துடிக்கும் நிலைகளையும் பின் கற்புப்பகுதியில் கடவுளைய டைந்து இன்புற்றிருக்கும் நிலையையும் நம் உணரலாம்.

மாணிக்கவாசகர் இறைவன் தன்னைக் குறிக் கண்கொண்டு ஆண்டமையினால் தான் அவரது பொருளாகிவிட்டேன் என்று இறைவனுடன் சேர்ந்து இன்புற்றிருக்கும் நிலையை,

அணய மமிழ்துமென் னாவியுமாயவன்

றில்லைச் சிந்தாமணி(கோவை)

சிலம்படி கொண்ட செஞ்சீறடிபங்கன்றன் சீரடியார்

குலம்பணி கொள்ளவெனைக் கொடுத்தோன்

தெவ்வரை மெய்யெரி காய்சிலை

யாண்டென்னை யாண்டு கொண்ட செவ்வரை மேனியன் (கோவை செய் 140)

நினைவித்துத் தன்னையென் னெஞ்சத்

திருத்தம்பலத்து நின்று புனைவித்த வீசன் செய்-140)

பொதுவினிற் றீர்த்தென்னை யாண்டோன்

புலியூரான் (செய்-146)

எனவே இறைவனே மாணிக்கவாசகரை ஆட்கொண்டிருக்கையில் பேரின்பத்தில் திளைத் திருந்ததனால் பேரின்பக் காதலை உலகியல் அன்பினைந்திணை யொழுக்கதிணைக் கொண்டு சிலேடையாகக் கூறினார். கந்தபுராணத்திலும் களவுப்படலத்தில் வள்ளிக்கும் முருகனுக்குமுள்ள பேரின்பமானது சிற்றின்ப நெறியாலே உணர்த்தப்பட்டதாம். இனி உலகத்தாருக்கு உலக இயற்கையான அறம், பொருள், இன்பம், வீடு, ஆகிய நாற்பயனைத் தரக்கூடிய வாழ்க்கை நெறி-களைக் கூட இறைவனே நால்வர்க்கு உணர்த்தியிருந்தமை உலக இயக்கத்தைக் கருத்திற்கொண்டே செய்யப்பட்டதாகும். இதனை மாணிக்கவாசகர்

அருந்தவருக் கறமுதனான் கன்றருளிச் செய்திலன் ஏல்

திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் (திருச்சாழல்)

என்றும் ஆரணம் ஆகமங்கள் அருளினால் உருவுகொண்டு

காரணன் அருளானாகில் கதிப்பவர்

இல்லலையாரும் சிவஞானசித்தி

என்று கூறுவர். மேலும் மானுடர் உலக இன்பங்களைத் துய்ப்பதற்காகப் போகியாக மாதொருபாகத்தன் ஆகியும் பின் போகங்களில் உயிர் உவர்ப்படைகையில் துறவையடையுமாறு

யோகியாகவும் தோன்றுவான் என்பதனை

பாகமதி லுத்தமியை வைத்தல்பழு தென்றாய்

போகமுல குக்கருள் புரிந்தருள வென்றே

மாகமுகி லொத்தகுழன் மங்கையொ டிருந்தான்

யோகமுயிர் கட்டுதவ யோகவுரு வானான் சாழலோ

சிவஞானசித்தியாரும்

போகிபிருந் துயிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்

யோகியா யோமுத்தி உதவுகல லதுவு மோரார்

என்றும் பட்டினத்தடிகள் பாவையுடன் இருந்த பரமயோகி (மும்மணிக்கோவை)

என்றும் கூறினார். இனி உலகத்தோருக்காகப் போகியாகிய இறைவனும், இறைவியுமே முதல் இல்லறத்தோராராவர். இவர்களுடைய இல்லறக் கிழமையிற் கூட யோக ஞான நெறிகள் படிமுறையாக ஏற்படுவன என்பதற்கு உமைக்கு ஆகமம் உபதேசித்த வரலாறு எடுத்துக்காட்டாக அமையும். இறைவன் கைலையில் உமைக்கு ஆகம நுண்பொருட்களை உபதேசித்த பொழுது உமை கருத்தூன்றிக் கேட்கவில்லை.( இது யோக ஞான நெறிகள் எல்லா நிலையிலும் கைகூடா என்பதனையே குறிப்பாகச் சுட்டும்) அதனால் வலைஞன் மகளாகப் பிறக்குதி என இறைவன் சபிக்க, அதனால் ஐங்கரனும், ஆறுமுகனும் அவ்வாகமத்தை கடலினுள் வீசியும் கிழித்தும் விட்டனர். இதனால் ஆறுமுகனை ஊமைப் பிள்ளையாகப் பிறக்குதி என்றும் அவர்களை உள்ளே விட்ட நந்தியைச் சுறாவாகிக் கடலுள் அவ்வாகமத்தை மீட்டு வலைஞகுமாரியாகிய உமைக்கு உத்தரகோசமங்கையில் உபதேசித்தார் என்று நம்பி திருவிளையாடல்புராணம் கூறும். ஆனால் மாணிக்கவாசகர் இவ்வாகமத்தை முதலிற் சொன்னதும் கடலுள் வீசி மீட்டதும் மகேந்திரமலையில் என்பர். இது தென்னகத்துக்குக் கடல் கோள்களுக்கு முற்பட்ட நிகழ்ச்சியெனக் கருத முடிகின்றது. ஆயினும் மகேந்திரமலையில் சொன்னபொழுது உமைகவன மூன்றிக் கேட்காமையால் கடலுள் வீசித்திரும்பவும் தோற்று வித்தபின்னர் உமையுடன் இல்லறக்கிழமை பூண்டு இன்னருள் விளைவித்ததும் நயப்புறவு எய்திய பின்னரே ஆகமங்களை மீட்டும் கூறினார் என்பதனை மாணிக்கவாசகரும்

**மன்னு மாமலை மகேந்திரமதனிற்**
**சொன்னவாகமந் தோற்றுவித்தருளியும்**
**கல்லாடத்துக் கலந்து இனி அருளி**
**நல்லாலோடு நயப்புறவெய்தியும்**
**பஞ்சப்பள்ளியில் பால்மொழிதன்னொடும்**
**எஞ்சாது ஈண்டும் இன்னருள் விளைத்தும்**
**மா ஏட்டாகிய ஆகமம் வாங்கியும்**
**மற்று அவைதம்மை மகேந்திரத்திருந்து**
**உற்ற ஐம்முகங்களால் பணித்தருளியும்**

என்று கூறுவர். எனவே இல்லறம் துறவறத்திற்கான ஒரு பயிற்சிக்களம் என்பது புலனாம். களவுப்பகுதியில் ஒத்தகருத்துள்ள ஒருவனுக்கும் ஒருத்திக்கும் துளிர்த்த அன்பானது, கற்புப் பகுதியான இல்லறத்தில் தன்னலமற்ற அன்பாக வளர்ந்து அறங்களைப் பேணவைக்கும். இந்த அறவழித் தருமங்களே ஒருவனுக்குத் துறவு வழியை ஆற்றுப்படுத்தும் வழிகளாம். துறவு நிலையில் இந்த இன்பமானது அன்பேசிவம் எனப் பரந்து நிற்கும். அப்பொழுது துறவின்பயனாகிய பிறப்பற்ற நிலை கைகூடும். இந்நெறிகளையே தொல்காப்பியம், திருக்குறள், முதலிய நூல்களும் வகுத்துக் கூறியுள்ளன. திருக்கோவையாரின் நோக்கமும் இதுவேயாம் அதனாலே குமரகுருபரர் 17ம் நூற்றாண்டு கோவையை

**ஐந்திணை யுறுப்பியல் நற்பொருள் பயக்கும்**
**காமஞ்சான்ற ஞானப் பனுவல்**
**(சிதம்ரமும்மணிக்கோவை)**

எனப் போற்றினர். மனிதனின் வாழ்க்கைத் தத்துவங்களை முழுமையாக உணராதவர்களே கோவையின் உண்மையை தெரியாததவர்களாகக் கவிபாடிச் சிரிப்பித்தனர். ஆனால் சுந்தரர் திருத்தொண்டத்தொகையுள் மாணிக்கவாசகர் சேர்க்கப்படாமை அவர் சுந்தரர் காலத்திற்குப் பிற்பட்டவர் என்றும், மாணிக்கவாசகர் குறிப்பிடும்

**வேதமுதல் விண்ணோடு மண்ணுந் துதித்தாலும்**
**ஓத உலவா வொருதோழன் தொண்டருளன் (திருவெம்பாவை)**

எனும் தோழன் சுந்தரமூர்த்திகளையே குறிப்பிடும் என்றும் சிலர் கருதுவர். இங்கு தனது அடியார்களுக்கு மட்டுமே தோழனாக இறைவன் இருப்பார் என்பதே பொருளாகும். மாணிக்கவாசகர் சுந்தரருக்குப் பிற்பட்டவர் என்போர் கூற்று உண்மைக்கு முரணாம். சுந்தரர் குறிப்பிட்ட தொகையடியார்கள் தில்லைவாழ் அந்தணர், பொய்யடிமையில்லாப்புலவர் பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலேவைத்தார், திருவாரூர்ப்பிறந்தார், முப்போதும் திருமேனி தீண்டுவார், முழுநீறுபூசிய முனிவர், அப்பாலும் அடிசார்ந்தோர் ஆகியோராவர். எனவே சுந்தரர் பொய்யடிமையில்லாத புலவருக்குள் மாணிக்கவாசகரைக் குறிப்பிட்டார் என்பாரும் உளர்.

பொய்யடிமையில்லாத புலவருக்குள் கடைச்சங்கப் புலவர்களான நக்கீரர், கபிலர், பரணர், இடைக்காடர், முதலானோரே இடம் பெற்றனர் என்பதனால் கடைச்சங்கப் புலவரல்லாத மாணிக்கவாசகரை உள்ளடக்கினர் என்பதும் பொருத்தமற்றதாகும்.

மற்று, மாணிக்கவாசகர் தன்னைப் பொய்மையேன் (திருச்சதகம் வரி 390) மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து, (அற்புதப்பத்து) பிறப்பிவை நினையாது பொய்களே புகன்று(அற்புதப் பத்து) என்றெல்லாம் குறிப்பிட்டு தான் பொய்யான வாழ்விற்கு அடிமைப்பட்டிருந்ததனை நினைவு கூருவார். எனவே எவ்வகையாலும் சுந்தரர் இவரைப் பொய்யடிமையில்லாப் புலவருக்குள் வைத்துப் போற்றியிருக்கவில்லை என்பது தேற்றமாம். மற்று அறுபத்து மூன்று நாயன்மார்களும் வல்வினையாற்றியிறையருள் பெற்றிருக்க, அமைச் சராய் உலகியல் இன்பங்களில் திளைத்திருந்த மாணிக்கவாசகரை ஆட்கொள்ள இறைவன் திருக்குறிப்புக்கொண்டு மானுடவடிவில் குருவாய் வந்து ஆட்கொண்டமையின், ஆகமநெறி உபதேசம் பெற்று ஞானம் கைவரப்பெற்றவர் என்பதனால் தவிர்த்தனர் என்பர் சிலர். இதுவும் பொருத்தமான காரணமாகத் தெரியவில்லை. ஏனெனில்,

**வேறுவேறு உருவமும் வேறு வேறு இயற்கையும்**

**நூறுநூறாயிரம் இயல்பினதாகி ஏறுடை ஈசன் இப்புவனியை உய்ய**

**கூறுடை மங்கையும் தானும் வந்தருளி, (கீர்த்தித் திருவகவல்–23–26)**

என மாணிக்கவாசகர் கூறுவது போலத் திருஞானசம்பந்தருக்கு ஞானப்பால் கொடுத்தமை சுந்தரருக்கு சீட்டு எழுதிக் கொடுத்தமை, சிறுத்தொண்டரிடம் மானுட மாமிசத்தை விருந்தோம்பலாகக் கேட்டமை போன்ற அருட்கோலங்கள் யாவும் ஆகம நெறிப்பட்ட குருவடிவங்களேயாம். அவ்வவர் தகுதிக்கும், பக்குவத்திற்குமேற்ப குரு மானுட வடிவங்கள் ஏற்பார் என்பதனால் சிவன் மாணிக்கவாசகரைச் சுந்தரரோ அல்லது சேக்கிழாரோ தவிர்த்தி ருந்தமைக்கு நாம் காட்டக்கூடிய இன்னோர் காரணம் மாணிக்கவாசகர் வேதாந்திகளை மிண்டிய மாயாவாதம் என்னுஞ் சண்டமாருதஞ் சுழித்த டித்தார்த்த எனச்சாடியமையேயாம். இது உட்சமயக் கோட்பாடான வேதாந்திகளைக் கண்டனம் செய்தார் என்று கருத இடமளிக்கிறது. வேதாந்திகளைக் கண்டித்தால் அது வடமொழி வேதங்கள், உபநிடதங்களாகிய முதல் நூல்களையும் கண்டித்ததாகவே கருதப்படும். ஆனால் மாணிக்கவாசகர் வேதநூல்களைக் கண்டித்தவரல்ல என்பதற்கு **வேத மெய்ந்நூல் சொன்னவனே (நீத்தல்விண்ணப்பம்)**

**வேதநூன்கும் ஓலமுட்டுணங்கு நின்னை( திருச்சதகம்)**

**பாடுவனநூல்வேதம்(திருச்சதகம்)**

**மூவர் நான்மறை முதல்வா போற்றி**

**ஆயநான் மறையவனு நீயே ஆதல்**

**வேதமொழியர்**

**மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்**

**செறிபொழில் சூழ்தில்லை நகர்த்திருச் சிற்றம்பலம் பலமன்னி**

**மறையவரும் வானவரும் வணங்கிட நான் கண்டேன் (கண்டபத்து)**

**வேதங்கடொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே (கண்டபத்து)**

என்பன போன்ற போற்றுதல்கள் சான்று பகர்கின்றன. மேலும் தில்லை வாழ் அந்தணர் மூவாயிரவரைத் திருக்கோவையாரில் குறிப்பிடுவர். எனவே மாணிக்கவாசகர் வேதங்களையும், வேதங்களில்வல்ல வேதியரையும் கண்டித்தவர் அல்லர் என்பது புலனாம். இவர் கண்டித்தது வேதங்களில் மகாவாக்கியங்களுக்குக் கொடுத்த விளக்கங்களால் உருவாகிய வேதாந்த தத்துவத்தையேயாம். இவரது காலத்துக்கு முற்பட்ட மணிமேகலை காலத்திலே ஆகமங்களை அடிப்படையாகக்கொண்டு உருவாகிய சைவசித் தாந்திகளுக்கும் வேதங்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்த வேதாந்திகளுக்கும் இடையே முற்றிலும் முரணான கோட்பாடுகள் இருந்துள்ளன. சித்தாந்திகள் தத்துவத்தை

**ஆகம அளவை அறிவன் நூலால் போக புவனம் உண்டு (காதை)**

**என்றும் வேதாந்திகள் தத்துவத்தை, பேர் உலகு எல்லாம் பிரமவாதி ஓர் தேவன் இட்முட்டை என்றனன் (காதை )**

என்றும் மணிமேகலை குறிப்பிடுவதைக் கொண்டு இது உணரத்தக்கது.

ஆனால் மாணிக்கவாசகர் வேதாந்த தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டவர் அல்லர் இவர் வடநாட்டு தென்நாட்டு சைவசமய வளர்ச்சியை நன்கு உணர்ந்தவர். எனினும் தென்னாட்டில் சிறப்பாக போற்றப்பட்ட சிவாகமத்துவங்களைப் போதிக்கவல்ல

குருவை அவாவி இருந்த காலத்திலேதான், இவருக்குத் திருப்பெருந்துறை சென்றவிடத்து வழியில் குருந்த மரநிழற்கீழ் இறைவன் திருவருளால் உபதேசம் பெற்றார். இவ்வாறு இறைவன் இவரையாட்கொண்டமையை மாணிக்கவாசகர் உலவாக் காலந்தவம் எய்தி உறுப்பும் வெறுத்திங்குனைக் காண்பான் பலமாமுனிவர் நனிவாடப் பாவியேனைப் பணிகொண்டாம் நீச னேனை ஆண்டு கொண்ட நின்மலா் என்று போற்றினார். ஆனால் அடியார் கூட்டத்தின் நடுவே ஞானோபதேசம் கிடைக்கப்பெற்றும் அடியார்கள் குறித்ததினத்தில் தீக்குண்டத்தில் பாய்ந்து இறையடிசேர இவர் தனியானார். இந்நிலையில் இவர் தன்னிலை கண்டு இரங்கிப் புலம்பியிருந்தனர்.

சீரேறடியார் நின்பாதஞ் சேரக்கண்டுங் கண்கெட்ட ஊரேறாமிங்
குழல்வேனோ? கொடியேன் உயிர்தான் உலவாதோ?
கோனே என்றன் நிருக்குறிப்புக்கூடு வார்நின் கழல்கூட
ஊனர் புழுக் கூடிதுகாத்திங் கிருப்பதானேன் உடையானே
மெய்மை அன்பர்உன் மெய்மை மேவினார்
ஈறிலாதநீ எளியை ஆகிவந்த
ஒளிசெய் மானுடமாக நோக்கியும்
கீறி லாதநெஞ் சுடைநாயினேன்
கடையன் ஆயினேன் பட்ட கீழ்மையே
திருச்சதகம் செய்–91

என்பன இவரின் குழைவுகளிற் சிலவாம். இந்த அனுபவவாயிலாகப் பதி–உயிர்–தளை ஆகிய மூன்று பொருட்களை உணர்ந்து இறைவனின் இயல்புகளைப்போற்றுவர்.

போற்றி இப்புவன நீர்தீக் காலொடு வானம்
ஆனாய்
போற்றி எவ்வுயுர்க்குந் தோற்றம் ஆகி நீ தோற்றம் இல்லாய்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாய் ஈறின்மை ஆனாய்
போற்றி ஐம் புலன்கனின்னைப் புணர்கிலாப் புணர்க்கையானே!
திருச்சதகம்
உண்டோர் ஒண்பொருள் என்றுணர் வார்க்கெல்லாம்
பெண்டிர் ஆண்அலி என்றறி ஒண்கிலை
தொண்ட னேற்குள்ள வாவந்து தோன்றினாய்
கண்டுங் கண்டிலேன் என்ன கண் மாயமே

எனவே இவரது வாழ்வின் சமய ஞான அனுபவங்கள், இறைவனுக்கும் இவருக்கு மிடையேயுள்ள தொடர்பை ஆண்டான் அடிமையெனக் காட்டி நிற்க வேதாந்திகள் உண்மைப்பொருள் ஒன்றே இவையெல்லாம் அப்பிரமத்தின் தோற்றமே, இவ்வாறு பரப்பிரம்மம் திரிந்து தோன்றுவதற்குக் காரணமாய் இருப்பது மாயையே என்றனர் எனவே உயிரின் ஈடேற்றத்திற்கு இது பொருந்தாத தத்துவம் என்பதனை உணர்ந்தே மாணிக்கவாசகர் வேதாந்திகளைக் கண்டித்தார். வேதாந்திகளுக்கும் சித்தாந்திகளுக்கும் வேதாகமங்கள் இறைவனால் அருளப்பட்ட முதனூல்களாகையால் உட்சமய தத்துவப்பூ சல்களை திருமூலர், தேவாராசிரியர்கள், முதலான பிற்காலத்தவர்கள் விரும்பவில்லை. அதனால் வேதாந்த சித்தாந்த தத்துவங்களைச் சமரசப்படுத்த வேண்டிய அவசியத்தை இவர்கள் உணர்ந்து சமரசப்படுத்தினார்கள்.

திருமூலர் சிவமாதல் வேதாந்த சித்தாந்தமாகும். என்றும்

அப்பர் எல்லாஞ் சிவனென நின்றாய் போற்றி

என்றும் இறைவன் அனைத்திலும் கலந்து தானேயாய் நிற்கும் அபேதநிலையைச் சுட்டி வேதாந்தத்தினை விளக்குவார். மேலும் சம்பந்தர்

உரைசேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனிபேதம்
நிறைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்காங்கே நின்றான்.

என இறைவன் எல்லாவற்றிலும் ஒன்றாய் உடனாய் வேறாய் நின்று இயக்குவான் என வேதாந்தத்தைச் சித்தாந்தத்தில் தெளிவுபடுத்துவார். சேக்கிழாரும்

வேதப் பயனாஞ் சைவம்
அருவாகி உருவாகி அனைத்துமாய் நின்றபிரான்

என வேதாந்தத் தெளிவாகச் சித்தாந்தத்தைக் காட்டுவார். இறுதியாக மாணிக்கவாசகர் குடி, குலம், பற்றிய வரலாறுகள் பற்றி ஆராய்கையில் நம்பியாண்டார் நம்பி இவரைத் திருவாதவூர்ச் சிவபாத்தியன் எனவும் வடமொழி ஆலாசி யமான்மியம் ஆதிசைவமரபினர் எனவும் கூறும் வேறு சிலர் வீரசைவர் என்பர் வேறுசில மரபுகள் அமர்த்தியப் பிராமணர் என்கின்றன. அமாத்தியதேசம் நேபாளத்திற்கருகில் உள்ளது. இங்கிருந்து புலம்பெயர்ந்து பிராமணக்குடியினர் முதலில் மூதாதையர் இங்கு வாழ்ந்த காலத்தில் தெலுங்கு மொழித் தொடர்புடையவர்களாய் வாழ்ந்தபின்,

புலம்பெயர்ந்து திருவாதவூரில் குடியமர்ந்திருக்கலாம் அதனால் இவர் பெற்றோர் தெலுங்கு மொழிப் பேச்சுடையவர்களாக இருந்திருக்கலாம் எனத் தெரிகின்றது. மாணிக்கவாசகர் குவலயானந்தம் எனும் தமிழ் இலக்கண நூலையும் எழுதியிருந்தார் என்று அண்மைக்கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இவர் தமிழில் பாண்டித்தியம் பெறக் கற்றதனால் இந்நூல் உருவாகியிருக்கலாம் எனில் தவறாகாது. எனினும் பெற்றோர் இவர் மீது செலுத்திய செல்வாக்கினால் இவர் அதெந்துவே, அத்தன், அச்சன், முதலான தெலுங்குச் சொற்களை திருவாசகத்தில் கையாண்டுள்ளமை குறிப்பி டத்தக்கது அதனால் தாய்மொழி தெலுங்கு எனக் கருத இடமளிக்கிறது

**அடியேன் ஆதரத்தழைத்தால்**
**அதந்துவே என்றருளாயே**


என்று அருட்பத்திற் செய்யுள் தோறும் விண்ணப்பிப்பார் எனவே மொழி வாரியான காழ்ப்புணர்வு கொண்டும் இவரைப் புறக்கணித்திருக்கலாம் என்று கருத

**சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்**
**ஆதமிலி நயேனை அல்லறுத் தாண்டானை**

என்ற இவரது குறிப்பு இடமளிக்கின்றது. இவர் வந்தேறு குடியினர் என்று கருதப்பட்டாலும் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கியமையால் பாண்டியன் அமைச்சராக்கப்பட்டார். பாண்டியர் சைவத்துடனும் தமிழுடனும் சிவனும், முருகனும் தொடர்புடை யவராகப் பழந்தமிழ் இலக்கிய மரபுகள் சுட்டியதனால், இவரும் பாண்டியரையே தமிழிற்கும் சைவத்திற்கும் முன்னுரிமையுடையவர்களாகக் காட்டலாயினர். எனவே **சோழ அமைச்சரான சேக்கிழார் பாண்டியருக்குச் சைவமும் தமிழும் வளர்க்கச் சிவன் உடனாய் இருந்தான் என்று மாணிக்கவாசகர் போற்றியிருந்தமையை இயல்பா கவே வெறுத்தார்.**

**திருக்கோவையாரையும் வழிபாட்டிற்குரிய நூலல்ல என்று கருதியதனால் மாணிக்கவாசக சுவாமிக ளுக்கு பெரும் முக்கியத்துவம் சைவசமய உலகில் கொடுக்கக்கூடாது என்ற குரோத எண்ணமும் இவருக்குத் தலைப்பட்டிருந்தது.**

மற்று இவர் வேதாந்தக் கோட்பாட்டைச் சாடியதனாலும் மாணிக்கவாசகர் சமய உலகில் தீவிரப்போக்கை மேற்கொண்டிருந்தார் என்று கருதி அவரை ஒதுக்குதலே சிறந்ததெனக் கருதப்பட்ட தாகலாம். இறுதியாக மாணிக்கவாசகர் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர் என் மொழிக்காழ்ப் புணர்வுகள் தடைசெய்தன எனலாம். ஆனால் யார் என்னசெய்தாலும் மாணிக்கவாசகருக்கே நடராசப் பெருமானின் பக்கலில் வீற்றிருக்கும் பெருமை திருப்பெருந்துறையில் கிடைக்கப் பெற்றதாம். அதுவே இறைவன் திருக்குறிப்புமாம்.



# MARKANDAN & CO

## SOLICITORS

**Empowered to Administer Oaths**

## M. MARKANDAN. LLB

720 ROMFORD ROAD
MANORPARK
LONDON
E12 6BT

TEL
0208 514 8188
FAX
0208 514 8303

**All aspects of immigration matters from appeals to European court of human rights**
**All types of conveyancing**
**Litigation**
**All courts civil/criminal**
**Landlords/Tenant matters**
**Matrimonial**
**Police station advice**
**All D.S.S and housing benefit matters**

**LEGAL AID**

# Rani Fashions

ஈஸ்ட்காமில் தமிழர்களின் மாபெரும் புடவைக் களஞ்சியம்

## Specialist in Wedding sarees, Suites, Children Wears



எங்களிடம் திருமணத்திற்கான சிறந்த கூறைச் சேலைகள் காஞ்சிபுரம், அபூர்வா, றங்கோலி, கோலம் மற்றும் பலரக சாறிகள் கிளவுஸ் துணிகள் சுடிதார் குழந்தைகளுக்கான ஆடைகள் மற்றும் **immitation Jewelleries Ect.** நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளப்படும்.

**302 High Street North, Manor Park,**
**London E12 6SA**
**Tel: 0208 472 9970 Mobile: 0958 504 118**

# சரித்திரப் பிரசித்தி பெற்ற யாழ் வடமாராட்சி துன்னாலை வல்லிபுரஆழ்வார் தேவஸ்தானம் சக்கர வடிவில் கருவறை அமர்ந்த மாயவன் கோவில்

**துன்னையூர் ராம். தேவலோகேஸ்வரக்குருக்கள்**

அனைவரும்
குறிப்பிட்ட

இயற்கை எழில் சிறப்புக்களை எல்லாம் தன்னகத்தே கொண்டு ஆழியால் சூழப்பெற்ற பொன் நடு நம் இலங்கைத் திருநாடு. நிலவளம் நீர்வளம், மலைவளம், வனவளம், என பூரணத்துவம் நிறைந்து, கோணேஸ்வரம், கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம், தான்தோன்றீஸ்வரம் என பஞ்ச ஈஸ்வரத்தலங்களாம் சிவாலயங்களும், கதிர்காமம், மண்டூர், செல்வச்சன்னதி, போன்ற புகழ்பெற்ற முருகன் கோவில்களும், துன்னாலை வல்லிபுரஆழ்வார் பொன்னாலை வரதராஜப்பெருமாள் போன்ற சரித்திரப்பெருமைகொண்ட ஆலயங்களுள் துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரும் முதன்மை பெறுகின்றது. ஸ்ரீவல்லிபுரமான்மியம் எனும் நூலினிலே யாழ்ப்பாணத்தின் இருகண்கள் போல துலங்குவன துன்னாலை, பொன்னாலை, விஷ்ணுத்தலங்களாகும் என்று கூறப்பட்டி ருக்கின்றது. பெருமைமிக்க இவ்வாலயத்தின் சரித்திர வரலாற்றுக் கூற்றுக்கள் ஸ்ரீ தெட்சண கைலாசமான்மியம், ஸ்ரீ வல்லிபுரமான்மியம் போன்ற நூல்களில் சிறப்பாக எடுத்துக்கூறப்படுகிறது. ஸ்ரீ கண்ணபிரான் மச்ச அவதாரமாகத் தோன்றி கடலிலே மீன்வடிவாய் துள்ளிக் குதித்து ஆரவாரம் செய்து மக்களைத் திகைக்க வைத்து, அதிசயம் காட்டியதும், இந்நிகழ்வில் அப்பகுதிவாழ் (கற்கோவளம்) கடலோடிகள் அம்மீனைப் பிடிப்பதற்குச் செய்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. இவ் அதிசயம் காண அயலூர் மக்கள் கடற்கரைப் பகுதிக்குத் திரண்டுவந்து அதிசய மச்சத்தின் ஆரவாரங்களைக் கண்டு களித்தனர். அதேசமயம் வராத்துப்பளையைச் சேர்ந்த வல்லி நாச்சி எனும் வல்லி நாகசாபத்தால் குழந்தை இல்லாமல் நெடுங்காலம் தவமிருந்து வந்தார். இந்த பெண்மணியின் கனவில் பகவான் தோன்றி குறிப்பிட்ட கடற்கரைக்கு வருமாறு பணித்தார். மறுநாட்காலை வல்லி அக்கடற்கரைக்கு வந்து அமர்ந்து கண்களை மூடி பகவானை நினைத்து தியானிக்க அதிசயமாய் ஆரவாரம் செய்து குதித்த மீன் வல்லியின் மடியில் வந்து வீழ்ந்து அழகிய குழந்தையாக மாறியது. கண்ணன் குதித்தான் என்று கூடி நின்றோர் ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர். வல்லியின் ஆலோசனைப்படி அக் குழந்தையை ஒரு பல்லாக்கில் வைத்து அன்பர்கள், அவ்வூர், அயலூர் பிரமுகர்கள், அடியார்கள் புடைசூழச் செடிகளும், மண் மேடுகளுக்கும் ஊடாகத் தாக்கி வந்தனர். நெடுதூரம் தூக்கிவந்து களைப்புற்ற அடியார்கள் பல்லாக்கை கீழே வைத்துவிட்டு தாகசாந்தி செய்து களைப்பாறிவிட்டு மீண்டும் பல்லாக்கைத் தூக்கமுயன்ற போது பல்லாக்கை அசைக்க முடியவில்லை. குழந்தையும் மறைந்துவிட்டது. அதன்பின் அவ்விடத்தில் அழகிய அந்தணர் ஒருவர் தோன்றி ஒரு சக்கரத்தைக் கொடுத்து அவ்விடத்திலே அதைப்பூசிக்கும்படி கொடுத்துச்

சென்றார். பல்லாக்கு வைக்கப்பட்ட இடத்தில் சக்கரத்தை வைத்துப் பூசித்து வந்தனர். இன்றும் மூலஸ்தானத்திலே சக்கரமே பிரதிஸ்டைசெய்யப்பட்டு வழிபாடு நடபெறுகின்றது. வல்லி நாச்சி எனப்படும் வல்லியினாலே இந்த வழிபாடு ஆரம்பிக்கப் பட்டமையினாலும் சக்கரப் பிரதிஸ்டை செய்யப்பட்டமையாலும் ஸ்ரீ வல்லிபுர சக்கரத் தாழ்வார் எனும் நாமம் ஆலயத்திற்கு வழங்கலாயிற்று. காலப்போக்கில் மருவி வல்லிபுராழ்வார் எனும் நாமமாய் இஃது அமைந்துவிட்டது. இவ்வாலயம் அமைந்த துன்னாலையை அக்காலம் ஆட்சிபுரிந்த செகற்கொடிதேவன் எனும் தலைவன் குடிசன மக்களுக்கு இடங்களைப் பகிர்ந்து கொடுக்க நிலஅளவை செய்யும் போது வல்லிபுர ஆழ்வார் ஆலய எல்லையை ஒரு நாகபாம்பு சுற்றிவந்து தனக்குரிய காணிப்பங்கை காட்டி நின்றதாகவும் ஸ்ரீ வல்லிபுரமான்மிய நூலில் கூறப்பட்டு இருக்கின்றது. சரித்திரம் புரியாத சிலர் இவ்விடத்தை வல்லிபுரக்குறிச்சி என்றும் கூறிவருகின்றனர். வல்லிபுரம் என்பது ே ஸத்திர நாமமாகும் துன்னாலை ஊரில் பலவிதபெயர்கள் கொண்ட கோவில்களும் உண்டு. அவை அவ்வாலய நாமங்களாலே கூறப்படுகின்றது ஆயில்நின்றெல்லை, புளியங்கியான், வெல்லிகந்தோட்டம், கொட்டிக்குளிப்பான் கோவிற்கடவை,மிந்திரன் அல்லையம்பதி, குருகட்டு, வல்லிபுரம், தேனப்பாய், சோழியவத்தை, மருதடி, பிரத்தியஞ்களி என்பன துன்னாலையூரின் ஆலய நாமங்களாகும் இதில் அருகே அமைந்த ஆலயங்களுக்குக் கூட ஆலயநாமங்கள் வேறுபடுகின்றன. அவை குருகட்டு விநாயகர், வல்லிபுரமாயவன், அதேபோல் புளியங்கியான் பிள்ளையார் வெல்லிங்கன் தோட்ட விநாயகர், இவை மிக அருகருகே உள்ள ஆலயங்கள், வல்லிபுரஆழ்வார் மேற்கு வீதிப்புற றோட்டின் அருகே நின்று பார்த்தால் துன்னாலை ஆரம்ப எல்லையின் புளியங்கிள்ளியான் பிள்ளையார் ஆலயம் நன்கு தெரியும் அத்தோடு மிகப் பழமை வாய்ந்த புளியங்கிள்ளியான் பிள்ளையார் ஆலய ஏடுகள் கூற்றில் கிடைக்கப்பெற்ற ஊஞ்சல்பாமாலை பாடல்ஒன்று துன்னாலையில் உள்ள ஆலயம் அனைத்தையும் சுட்டி நிற்கின்றது. அப்பாடல் இதோ

கற்பகந்தரு துன்னையம்பதி தாங்கும்
கணேசராலயமெட்டும் வியங்க
நற்பதியாய் மிந்திரம்மன் விட்டமனோங்க
நாதபூத வராயநாம சிவாலயமோங்க
பொற்பதியாய் வல்லிபுரமாயன் நரசிம்மரோங்க
பொலிவுடனே தேனப்பாய் வீரபத்திரனுமோங்க
அற்புதமாய் அல்லையம்பதியழகன் ஞானவைரவரோங்க
அழகு சிதம்ர விநாயகரோ ஆடீரூஞ்சல்.

இந்தப் பாடலில் துன்னாலையில் உள்ள எட்டு விநாயகர் ஆலயங்களும் மற்றும் அம்மன் சிவன், விஷ்ணு, நரசிம்மன், வீரபத்திரர், முருகன், வைரவர், என அனைத்து ஆலயச் சிறப்பும் எடுதியம்பப்படுகிறது. இத்தனை சிறப்பு அம்சங்கள் நிறைந்த துன்னையம்பதி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் அண்மையில் சிறப்பான கும்பாபிஷேக விழாவும் தொடர்ந்து 48 தினங்கள் மண்டலாபிஷேகமும் ஆகமவிதிகளுக்கு அமைய நடந்தேறியது. தற்போது சிறப்புப் பொருந்திய ஆவணிஞாயிறு விரதவிழா நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது இவ்வாலய மஹோற்சவ விழா புரட்டாதி மாத அமாவாசை திதியில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பௌர்ணமி தினத்தன்று தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறுவது வழமை. திருவிழாக் காலங்களில் 16 உற்சவம் நடைபெறும். அதில் ரதோற்சவம், சமுத்திரதீர்த்தம், பட்டுத்தீர்த்தம், பாம்புத்திருவிழா, சப்பரம், வேட்டை, வெண்ணெய்த்திருவிழா, கோபியர் உற்சவம் என்பன மிகச்சிறப்புப் பொருந்திய உற்சவங்களாகும். ஆலயத்தின் பரம்பரை வழிவந்த அந்தணர்களே இன்றும் உற்சவ பூஜை, நித்தியநைமித்திய பூஜை என்பன நடாத்தி வருகின்றனர். அந்த வகையில் தற்போது பரம்பரை வழி கணபதிக் குருக்கள், புருஷோத்தமகுருக்கள் தற்போது பிரதமகுருவாய் கடமைபுரிகின்றனர். துன்னாலை, புலோலி, கற்கோவளம் சார்ந்த அடியார்கள் ஆலய நிர்வாக சபை அங்கத்தவராய் திருப்பணி புரிகின்றனர் வேண்டுவோர்க்கு வேண்டுவன வாரிவழங்கும் வைகுந்த வாசனாம் துன்னையம்பதி வல்லிபுரத்தான் மாயவனாய் கோகுலனாய், பரந்தாமனாய், பக்தர் குறை நீக்க சக்கரவடிவில் திருவருள் பொலிந்து அவ்வூர் சார்ந்த அனைவரையும் காப்பதே கண்ணன் மெய்யருளாகும்

# ஐயம் தெளிவோம்

**இம் முறை இப்பகுதிக்குப் பல கேள்விகள் வந்துள்ளன. அவற்றிலிருந்து ஆறு கேள்விகளுக்கு விடையளித்துள்ளேன் . மிகுதிக் கேள்விகளுக்கான விடைகள் காலக்கிரமத்தில் கலசத்தில் வரும். வாசகர்களிடமிருந்து மேலும் வினாக்களை எதிர்பார்க்கின்றோம்.**

## மனிதர்களுக்கு எப்போ நிம்மதி வரும்?

நிம்மதி என்பது அவரவர் மனநிலையைப் பொறுத்தது. மனிதர் என்றைக்கும் ஒரே மனநிலையில் இருந்ததில்லை. நீங்கள் எந்த மனநிலையைப்பற்றிக் கேட்கின்றீர்கள்.

## தற்சமயம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது?

அநியாயத்துக்கெதிரான ஆன்மீக யுத்தம்தான் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.:.

## பிள்ளைகளின் வழிகாட்டல் பெற்றோரின் பொறுப்பில் தங்கி உள்ளதா சமூகத்திற் தங்கி உள்ளதா?

இருவரிலுமே இல்லை. பிள்ளைகளில்தான் தங்கி உள்ளது.

## பிள்ளைகளை கோயிலுக்குக் கொண்டு போவதற்கு ஏதாவது கவர்ச்சிகரமான விடயங்களை உங்களால் சொல்ல முடியுமா?

கோயிலுக்குள்ளும் கவர்ச்சி தேவையா ? பாவம் கடவுள்!

## சனீஸ்வரனை வழிபடுவதால் என்ன நன்மை?

சும்மா இருக்கிற சனீஸ்வரனை வீட்டுக் குள்ளை விருந்து வைச்சுக் கூப்பிடுவதுதான்.

## பணம் அதிகம் இருப்பவர்கள் தானம் செய்ய அஞ்சுவார்கள். ஏன்?

அவர்களுக்குத்தான் பணத்தின் அருமை பெருமை தெரியுமென்பதால்.

## மனத்திருப்தியுடன் இருப்பதற்கு என்ன செய்யலாம்?

சும்மா இருப்பதுதான்.

## கோவிலில் கொடி ஸ்தம்பத்துக்கு அப்பால் வீழ்ந்து கும்பிடலாமா?

கடவுளை எங்கேயும் விழுந்து கும்பிடலாம். யாரும் ஏதும் சொல்வார்கள். ஏற்காமல் உங்களுக்கு நேரம் வரும்போதும் மனம் வரும் போதும் ஆண்டவனை நன்றாக விழுந்து கும்பிடுங்கள்.

**பதில்கள்: சிவாயன்**

# சிறுவர் கலசம்

வணக்கம்!


பெற்றார்களே! இளையவர்களே!

இந்தப்பகுதி இளையவர்களாகிய உங்களுடையதே! இதனில் பங்கு கொள்ளவேண்டியமை உங்கள் கடமையே! இது பற்றிய அபிப்பிராயங்களை அறிந்து கொள்ள அவாவுடையோம்! இம்முறை மகாபாரதக் கதையை ஆங்கிலத்தில் தருகின்றோம். இது தொடராக வெளிவரும் .

படித்துப் பயனுறுங்கள்

# MAHABHARATHAM

## *Amba's Revenge*



Santanu married Satyavati and led a happy life. Subsequently Satyavati gave birth to two sons, the eldest was Chitrangadh. After the demise of Santanu, Bhishma crowned Chitrangadh as the king. But the king died shortly thereafter. So Bhiishma coronated Vichitravirya, the second son, as the king. But since the boy was still young, Bhishma ruled the land on his behalf. There was peace and prosperity everywhere. Several years passed. Vichitravirya was now a young man and was of marriageable age.

The king of Kashi had three daughters by the names of Amba, Ambika and Ambalika, who were renowned for their beauty. A duel was arranged and the king proclaimed that he would give his daughters in marriage to the winner of this duel. Bhishma heard about this and set forth to Kashi. He defeated all the other princes and ledt for Hastinapur along with the three prinsses. On the way Shalvaraj challenged him to a war because he wanted to marry Amba. But Bhishma defeated him and reached Hastinapur.



Actually, Bhishma had selected these princesses as brides for Vichitravirya. But Amba wanted to marry Shalvaraj and indicated this to Bhishma. She also requested him to send her to Shalvarj.

On hearing this, Bhishma did not want to force her into an unwilling marriage with Vichitravirya. So he sent her back to Shalvaraj. But Shalvaraj was not prepared to accept her. "You can live with whoever carried you away.", he scorned. He had not forgotten his humilitation at the hands of Bhishma. Amba returned to Hastinapur with a heavy heart. Bhishma felt sorry for her. By then, Vichitravirya had also decided not to marry Amba. She could not bear the humiliation. So she pleaded with Bhishma to marry her. But how could he? Had'nt he taken a vow not to marry? He said 'no' to her.

This infuriated Amba. She held Bhishma totally responsible for her plight. Hatred and revenge filled her thoughts. She sought the help of other kings to wage a war against Bhishma but none supported her. Her anger against Bhishma grew stronger. In despiration , she observed a very strict penance, praying to Lord Shiva. Her sole purpose was to kill Bhishma out of her own hands.

Pleased with Amba's penance, Shiva appeared before her. But the boon she wanted was against the divine spirit. " Bhishma has the blessings of all gods and goddesses", and Shiva. Hence, nobody can kill him. But all humans on this earth are bound to die sooner or Later. You can kill Bhishma. But not now. You can do so in your next birth upon this earth. You will be born as a daughter to Drupad, the king of Panchala. Your wish will then be fullfilled".

Amba had only one aim in life to kill Bhishma. She was prepared to wait until even her next re-birth. She therefore headed straight to Drupad's palace and jumped into the sacrificial fire(yagna) being conducted there. Her body was reduced to ashes.

Amba was born to seek vengeance on Bhishma.

(to be continued in the next Kalasam)

# ஆதி சங்கரர்



எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர் கேரளாவில் உள்ள காலடி என்னும் கிராமத்தில் கடவுள் பக்தி கொண்ட சிவகுரு, ஆர்யாம்பாள் என்னும் அந்தண தம்பதிகள் வசித்துவந்தார்கள். அவர்களுக்கு ஒரே ஒரு குறை இருந்தது. அதுதான் எத்தனையோ கடுமையான விரதங்களை அனுஸ்டித்தார்கள். சிவபெருமானைத் தங்களுக்கு ஒரு மகனை அருளும்படி வேண்டிக் கொண்டார்கள். ஒரு நாள் இரவு சிவகுருவின் கனவில் சிவபெருமான் தோன்றி , சிவகுருவைப் பார்த்து கடவுள் பக்தி உடையவனும் பதினாறு வருட ஆயுளை மட்டும் கொண்ட மகன் வேண்டுமா அல்லது நீண்ட ஆயுளை உடைய சாதாரண மகன் வேண்டுமா? என்று கேட்டார்.

சிவகுரு நல்ல அறிவாளியும் , தெய்வ பக்தியும் உள்ள மகன்தான் வேண்டும் என்றார். இந்தப் பதிலைக் கேட்டு மகிழ்ந்த சிவபெருமான் நாமே உமக்கு மகனாகப் பிறப்போம் என்றார்.

நாளடைவில் ஆர்யாம்பாள் ஒரு ஆண் மகவினைப் பெற்றெடுத்தாள். அக் குழந்தைக்கு சங்கரன் என்ற பெயர் இடப்பட்டது.

சிறு வயதிலிருந்தே சங்கரன் மிக்க அடக்கமாகவும் சிறந்த புத்திசாலியாகவும் விளங்கினான். மூன்று வயதிலேயே அவன் நூல்களைப் படிக்க ஆரம்பித்தான்.


அவன்தன் நான்காவது வயதில் தன் தந்தையை இழந்தான். அதனால் அவன் தாய்தான் அவனுக்கு எல்லாமானாள். அவள் அவனுக்கு ஐந்து வயதில் உபநயனம் செய்து வைத்து பின் அவனை கல்வி கற்கக் குருவின் வீட்டிற்கு அனுப்பி வைத்தாள். அவன் இரண்டே வருடங்களில் எல்லாச் சாத்திரங்களையும் கற்றான்.



அந்தக் காலத்தில் குருகுல மாணவர்கள் வீடு வீடாகச் சென்று பிச்சை வாங்கி, அதில் தங்கள் வாழ்க்கையை நடத்துவது வழக்கம். ஒரு நாள் சங்கரன் பிச்சைக்காகச் செல்லுகையில் ஒரு ஏழை மூதாட்டியின் வீட்டை அடைந்தான். அச் சிறுவனுக்குக் கொடுக்கத் தன் வீட்டில் ஒரு நெல்லிக்கனியைத் தவிர வேறு ஒன்றும் இல்லையே என்று மூதாட்டி வருத்தப்பட்டாள். ஆகவே வெளியே வந்து மிக்க அன்புடனும் மரியாதையுடனும் அக்கனியைச் சங்கரனிடம் கொடுத்தாள். உடனே அவன் கணிகளை மூடிக்கொண்டு லட்சுமிதேவியை சில தோத்திரங்களால் வேண்டிக் கொண்டான். அந்த மூதாட்டியின்மீது அருள் பாலிக்கும்படி வேண்டினான். உடனே ஓர் அதிசயம் நிகழ்ந்தது. லட்சுமிதேவி அம்மூதாட்டியின் முற்றத்தில் தங்க நெல்லிக்கனிகளை மழையெனப் பொழிந்தாள். அந்த மூதாட்டியின் வறுமைநீங்கிற்று. சங்கரன் இயற்றிய அந்த தோத்திரத்திற்கு கனகதாரா ஸதோத்திரம் என்று பெயர். குருகுல வாசம் முடிந்ததும் சங்கரன் வீடு திரும்பினான். சற்றுத்தொலைவில் இருந்த பூர்ணா நதியில் தினம்போய் நீராடுவது அவனுடைய தாயார் வழக்கம். சங்கரனுக்கு இப்பொழுது வயது எட்டு. தாயார் இப்பொழுது நதிக்குச் செல்ல மிகவும் கஸ்டப்பட்டாள் என்பதைக் கண்ட சங்கரன் அந்த நதி தேவதையைப் பிரார்த்தனை செய்தான். உடனே அந்த நதி பராசக்தியின் உத்தரவின்பேரில் தன் திசையை மாற்றிக்கொண்டு இவர்கள் வீட்டுப்பாக்கம் ஓட ஆரம்பித்தது. சிறுவயதிலிருந்தே சங்கரருக்கு உலகைத்துறந்து சன்னியாசி ஆக வேண்டும் என்ற ஆசை இருந்து வந்தது. இதற்குத் தம் அன்னையின் அனுமதியைக் கேட்டார். ஆனால் அன்னை அனுமதி தரவில்லை.

ஒரு நாள் அன்னையும் மகனும் நதியில் நீராடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒரு முதலை சங்கரரின் காலைப்பற்றிக் கொண்டது.

சங்கரர் உரத்த குரலில் அம்மா முதலை என்னை இழுத்துச் செல்கிறது சன்னியாசியாக அனுமதி கொடு அப்போ அது என்னை விட்டுவிடும். என்று சொன்னார். செய்வது அறியாமல் ஆர்யாம்பாள் தவித்தாள். கடைசியில் சங்கரர் சன்னியாசியாகலாம் என்று உத்தரவு கொடுத்தாள் அதற்குள்ள மந்திரங்களைச் சொல்லி சங்கரர் துறவறம் பூண்டார். உடனே முதலை காலைவிட்டுவிட்டு எங்கோ மறைந்துவிட்டது.



இன்னும் வரும்...............

# இளைஞர் கலசம்

இப் பகுதி முழுக்க முழுக்க சிந்தனைக்கு மதிப்புக் கொடுக்கும் இளைஞர்களை கருத்திற் கொண்டு உருவாக்கியுள்ளேன். பன்னிரண்டு வயதிற்கும் முப்பது வயதிற்கும் இடைப்பட்ட இளைஞர்களை உள்ளடக்குவதாகவே இப்பகுதி அமையும். இப்பகுதியில் இளைஞர்கள் தங்கள் ஐயப்பாடுகள் சம்பந்தமான வினாக்களைத் தொடுத்து தெளிவுகளைப் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வினாக்களை

**Kalasam@Hotmail.com**

என்ற கணணி விலாசத்துக்கும் அனுப்பி வைக்கலாம்.

உங்கள் அபிப்பிராயங்களை வைத்துத்தான் இப்பகுதியை நாங்கள் மெருகுபடுத்தவோ விஸ்தரிக்கவோ முடியும். உங்கள் அபிப்பிராயங்களைத் துணிந்து எழுதுங்கள். நீங்கள் வெறும் வாசகர்களாக இல்லாமல் ஆக்கமும் ஊக்கமும் நிறைந்த பங்குதாரர்களாக மாறவேண்டும்.

ஆசிரியர்

## பண்டிகைகள் பற்றி இந்துமதம் கூறும் விஞ்ஞானம்

**வி. தர்ஷிகா – கொழும்பு**
**தரம் 12**

நம் இந்துமதமானது முற்றும் முழுதாக விஞ்ஞானத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்து மதத்தில் உள்ள பண்டிகைகளும் விரதங்களும் வேறு எம் மதத்திலும் இல்லை. அதில் பண்டிகைகளும் நோன்புகளும் மிகப் பெரிய அளவில் விஞ்ஞான உணர்வுகளை நமக்கு அளிக்கின்றன. ஆண்டு முழுவதும் உழைத்துப் பாடுபடும் எமக்கு மாறுதலான ஓர் உணர்ச்சியினை புனிதமான நினைவுகளுடன் கொடுக்கும் சந்தர்ப்பங்களே பண்டிகைகளாகும். தினமும் கிடைக்கின்ற சிற்றுண்டி தொலைக்காட்சி போன்றவற்றை விட சற்று வித்தியாசமான மாறுதலை விரும்பும் நம் மனதிற்காக ஏற்பட்டதே பண்டிகைகளாகும்.

பெரும்பாலான நோன்பு சார்ந்த பண்டிகைகளில் பட்டினி கிடப்பது, தூக்கத்தைக் கைவிடுவது, சிற்றின்பத்தைக் கைவிடுவது போன்றவை நம்முடைய உடலையும் மனதையும் தூய்மைப்படுத்த உதவுகின்றன. மேலும் உலகியற் சிந்தனைகளை விளக்கவும் உணவு, உறவு, இன்பம் ஆகியவற்றை அனுபவித்து அலுத்துப்போன நிலையில் உடலுக்கும் உள்ளத்திற்கும் ஓய்வு கொடுத்து சிறப்பாகச் செயற்பட உதவுகின்றது.

ஐம்புலன்களில் எதன்வழியே இன்பம் வந்தாலும் நோயினால் துன்பம் வந்தாலும் அது மனதைப் பாதிக்கின்றது. விரதங்களும் நோன்புகளும் ஐம்புலன்களைத் தூய்மைப்படுத்தும்போது மனம் தூய்மை அடைகின்றது. உபவாசம் என்பது நினைவாலும் உடலாலும் இறை உணர்வுகளை ஒட்டி இருப்பது என்று பொருள். அதனால் மனதிற்கு தேவையான உயர்ந்த நோக்கங்கள் நமக்குக் கிடைக்கின்றன.

மனம் பலவிதமாக அலையும்போது அதைக் கட்டுப்படுத்துவதற்கு தியானத்தை மேற்கொள்கின்றோம்.தியானத்தின் உச்ச நிலையில் எண்ணங்கள் படிப்படியாக ஓய்ந்து சலனம் இல்லாத முடிவு நிலை மனதிற்கு கிடைக்கின்றது.

நவராத்திரியில் சக்தி பூசை, தீபாவளியன்று நாகசதுர்த்தி, தைப்பொங்கலன்று சங்கராந்தி போன்றவை யாவும் மக்கள் மனதில் தீமையை ஒழித்து நன்மை பிறப்பதை ஞாபகப்படுத்தி புனித உணர்வுகளைத் தோற்றுவிக்கின்றன. தீபங்கள் ஏற்றதல் ஆடல் பாடல் விளையாட்டுப் போட்டிகள் அலங்கார ஊர்வலம் ஆகியவை மனம் பெறும் புத்துணர்ச்சியை வெளிப்படுத்துகின்றன. இது ஒரு மிகச் சிறந்த மனோதத்துவப் பயிற்சி.

ஆலய உற்சவங்கள் பண்டிகைகள் வெறும் பொழுது போக்காக அல்லாமல் நமக்கு உடலாலும் உள்ளத்தாலும் தேவைப்படும் தூய்மைப்படுத்தும் பயிற்சிகளை நமக்கு நயமாக இனிமையாக மகிழ்ச்சியூட்டும் வித்தில் அளிக்கின்றன. குடும்பத்தில் ஒற்றுமையையும் சமூகத்தில் நல்லுறவையும் பலப்படுத்தும் சாதனங்களாக அமைகின்றன. இதுவே இந்துமதம் அளிக்கும் பண்டிகைகளின் தனிச் சிறப்பாகும்.

# மூன்றெழுத்தைப் பாடவந்தேன்

மூன்றெழுத்தைப் பாடவந்தேன் - நான்
மூன்றெழுத்தைப் பாடவந்தேன்.
முத்தமிழின் மூச்சையெல்லாம்
பத்திரமாய் பதுக்கிவைத்து
வித்தைகள் செய்கின்ற பண்டிதரின்
கவிதைகளை கரையினிலே வைத்துவிட்டு
புதுவுலகப் புதுக்கவிதை பாடவந்தேன்.
ஈழத்திருநாட்டில் ஏழ்மைமிகு மக்கள் நாம்
வாழஒரு வழிதேடி வளர்க்கவேண்டும்
ஒரு மூன்றெழுத்து- பயிர்
இதை உணரா இளைஞர்களோ வளர்க்கின்றார்
ஒரு மூன்றெழுத்து - மயிர்
கூட்டுறவுக் கடையினிலே
குந்தியிருக்கும் முகாமையாளர்
நல்லரிசி பின்கதவால் விற்று
பணம் சேர்ப்பதும் மூன்றெழுத்து-மோசடி
பத்து மாதம் சுமந்து பெற்று
சீராட்டி தாலாட்டி
வளரந்தொரு மூன்றெழுத்து- அன்னை
தாய்மை யெனும் தாய்மையிலே
பின்னிப் பிணைந்திருப்பது.
ஒரு மூன்றெழுத்து- அன்பு!
அண்ணலும் நோக்குகையில்
அவளும் நோக்குவதால்
அங்கே ஒருப்படுவது
ஒரு மூன்றெழுத்து - மனம்
மனத்தினிலே கூடுகட்டிப்
பறந்து வருவது மோர்
மூன்றெழுத்து- காதல்
காதல் முடியாது சாதல் என
முடிவு வரின் உறுதுணையாய்
ஒரு மூன்றெழுத்து - விஷம்
தமிழ் என்ற மூன்றெழுத்தால்
இனம் எனும் பேதம்காட்டி
அகிலம் எங்கும் அகதி என்ற
மூன்றெழுத்து முத்திரை குத்தி
பரிதவித்து வாழ்வோருக்கு
உதவுவது மூன்றெழுத்து - கல்வி
உண்மையினை விட்டந்தப் பொய்மையிலே மூழ்கிடும்
கண்ணியம் அற்ற மாந்தரை நோக்கி
கவலை என்னும் மூன்றெழுத்தில் ஆழ்ந்தேனே!



கீர்த்தனா குணாளன் - கொழும்பு
தரம் 11

# The four paths to Brahman

Hindus believe there are four ways in which a person can live so that their soul can escape from the birth - rebirth cycle.the four ways are often called paths.Anybody can use any of the paths,and people often follow different paths at different times in their life.

**The path of knowledge**
This means knowing about the religion.Hindus who follow this path need a very good teacher and they must study the religion very carefully.They follow a patteren for their life.

**The path of meditiation**
Meditiation means concentrating so hard that you forget everything aroung you.You can only follow this path if your mind is free of things like work,home or family that might worry you.


**The path of love**
This path means choosing paticular god or goddess and making sure that you spend all your life worshipping them.Hindus following this path pray and make puja to the god or goddess.They also go on pilgrimages to worship them.The god or goddess they worship is most important thing in their life.

**The path of doing your best**
Many hindus think that for ordinary people this is the best path.It means doing your dharma-your duty-as well as you possibly can.Dharma is different for everyone,so each person has to decide for themselves what this path means for them and then work hard to follow it.

**Yoga**
The hidu name for the four paths which Hindus follow are the yogas.

Many people in western countries think that yuga means special exercises and breathing to clear your mind.This is part of yoga,butit really comes from the path of meditation which hindus call Raja-Yoga.

The Upanishads give advice about what you should do to prepare to meditate.They say that you should find somewhere clean and quite which is sheleterd from the wind.It should not have any rubbish or anything ugly.It should be beautiful and have the sound of running water.These things can help you concentrate.



# JUNIOR-SENIOR

This is to give the English reading public a gist of what this book, "Junior Senior' means - a treasure of two words "mantra from the tongue of a monk to a novice of my caliber in the year 1949, in the Jaffna peninsula in the Island of Sri Lanka, my mother land.

I was then twenty two plus (born on 4.3.27) a Senior Qualified English Assistant Teacher at Delft, an islet within an Island.

I come of a deeply religious family. My parents used to observe religious facts very often and lived on lean and prohibitive diet all through their life. Strait arid narrow was the path of life followed by my family as a whole. And no wonder, I developed from my young days a thirst for the knowledge of the invisible spheres of life. And right through in my life this spirit of search for truth continued to inflame my heart.

Hindu Mythologies and ancient lyrics in those days held an unusual fascination for me. I read all kinds of literature on these subjects and listened to the tales of 'Puranas' and 'lthihasas' as and when occasions presented such themes at the Hindu temple and other places of religious discourses. The thrills and joys I had experienced on those occasions cannot easily be described in words.

During this time of search for the ultimate, many of my close associates in those days hinted to me to see a monk called Yogar Swamigal residing at an 'Ashramam' at Colombogam (a suburban area of Jaffna town) in whom I could find my guru and destiny. He was said to possess unusual and extra ordinary mystic powers and insight into men and matters of all times.

Inflamed by a thirst to see this sage almost immediately I set our on a day in the month of October, 1949 on a bicycle to Colombogam twelve miles away from my home with an apple parcel in hand as an offering.

I reached a small hut shown by those around it as the "Ashramam' of Yogar Swamigal, my destined Guruswamy.

I entered the shrine like hut with reverence and awe but to my deepest disappointment I found no one there and heard someone from outside telling me that Swamy had gone out and would take time to return.

I consoled myself thinking that revelation takes place only step by step. First I heard the name of the lord. I am shown his abode and on the next trip I should be blessed with the glory of his sight.

I kept my apple offering at the foot of Swamy's seat a plank covered with deerskin, bowed down before it solemnly and quietly left for home.

I was restless the whole night and the following day until I started off again that evening on my pilgrimage to Colombogam Ashramam. I reached the holy place by about 5pm in the evening. As I entered the 'Ashramam' I saw a stainless steel like frame' of a personality seated on the deerskin "Asana' facing the North. It was a steady and attractive posture with silver headed shining beard following down a glowing face upto the chest. His firm and erect stature and figure only matched those of a Maharishi of Yore, the picturesque impression of whom I had in my mind's imagination.

In hand was a book opened as if partly read by him.

I stood still before the Swarmy with a feeling mixed with fear and devotion, hands folded and eyes firmly fixed on his lips in readiness to respond to my utterance that may proceed from it. Swamy glanced at me, shook his head gently and beckoned me to a seat before him.

I bowed down and sat as instructed. He ques tioned me with regard of my name and place of residence. Thereafter he gave the book he had in his hand and asked me to read aloud. It was English version of Bagavath Gita. I did read as ordered. In a minute or two he got the book back and started questioning me further as follows>

Swamy 'How far have you studied'?

Myself "Swamy, I have passed my Senior'

Swamy "Have you not passed your Junior yet?"

Myself (Thinking to myself that Swamy doesn't know Junior, Senior steps properly)

"Swamy it is after passing Junior only we can appear for senior exam I have already passed Junior years ahead."

Swamy (Laughing as loudly as possible) "So you have passed Junior and Senior. Junior Senior, Junior Senior, Senior Junior So now In-Nior, Se-Nior, well done, you man go now".

I got stunned, for I did not understand what he meant by such repeated utterances. Junior & Senior. I merely got up, bowed down before him in obedience and ieft the place. Back home and at work place I inquired from elderly learned persons what this 'Junior Senior utterance of Swamy could mean. Each one of whom I inquired gave a reply saying that these were utter ances of mystic personality and no one who hadn't direct contact with the Swamy in those circumstances could easily decipher the meaning thereof.

Although, I visited Swamy several times thereafter, because of my modesty I hadn't the courage to touch on that delicate subject. Each time I saw him, he would inquire for my name and place as usual and thereafter would mention some words at random.

The words so uttered would be quite appropriate to the situation in that they would strike hard at the center of my heart and truly and well, lifting my soul each time to a higher plane of thinking

In the meantime I took up a new appointment as a Rural Development Officer and in the course at my duties I was transferred to Batticaloa. In Batticaloa I met a disciple of his to whom I mentioned the two Mantratic words, 'Junior Senior'. He at once congratulated me on my fortune of having been conferred a 'Mantratic' like by Swamy and said that these suggested meanings: 'You near (God)' and hence 'See (God) near'. It is 'You Near, See Near'.

In another word, I am near "I AM' and should now see near "What IS'. I AM WHAT IS'.

It is something like the 'Upanishad'. Upa means near. Ni means be, and Shath means Truth. Be near Truth and Be the Truth.

The words stuck in my heart of heart - the treasure hold at the Love Divine ever since then.

When Swamy said 'You near, See near', He in fact saw that Truth of Eternity in my innocent heart, which I could not see it myself.

Swamy glanced at me, shook his head gently and beckoned me to a seat before him.

I bowed down and sat as instructed. He ques tioned me with regard of my name and place of residence. Thereafter he gave the book he had in his hand and asked me to read aloud. It was English version of Bagavath Gita. I did read as ordered. In a minute or two he got the book back and started questioning me further as follows>

Swamy 'How far have you studied'?
Myself"Swamy, I have passed my Senior'

Swamy "Have you not passed your Junior yet?"

Myself(Thinking to myself that Swamy doesn't know Junior, Senior steps properly)

"Swamy it is after passing Junior only we can appear for senior exam I have already passed Junior years ahead."

Swamy (Laughing as loudly as possible) "So you have passed Junior and Senior. Junior Senior, Junior Senior, Senior Junior So now In-Nior, Se-Nior, well done, you man go now".

I got stunned, for I did not understand what he meant by such repeated utterances. Junior & Senior. I merely got up, bowed down before him in obedience and ieft the place. Back home and at work place I inquired from elderly learned persons what this 'Junior Senior utterance of Swamy could mean. Each one of whom I inquired gave a reply saying that these were utter ances of mystic personality and no one who hadn't direct contact with the Swamy in those circumstances could easily decipher the meaning thereof.

Although, I visited Swamy several times thereafter, because of my modesty I hadn't the courage to touch on that delicate subject. Each time I saw him, he would inquire for my name and place as usual and thereafter would mention some words at random.

The words so uttered would be quite appropriate to the situation in that they would strike hard at the center of my heart and truly and well, lifting my soul each time to a higher plane of thinking

In the meantime I took up a new appointment as a Rural Development Officer and in the course at my duties I was transferred to Batticaloa. In Batticaloa I met a disciple of his to whom I mentioned the two Mantratic words, 'Junior Senior'. He at once congratulated me on my fortune of having been conferred a 'Mantratic' like by Swamy and said that these suggested meanings: 'You near (God)' and hence 'See (God) near'. It is 'You Near, See Near'.

In another word, I am near "I AM' and should now see near "What IS'. I AM WHAT IS'.

It is something like the 'Upanishad'. Upa means near. Ni means be, and Shath means Truth. Be near Truth and Be the Truth.

The words stuck in my heart of heart - the treasure hold at the Love Divine ever since then.

When Swamy said 'You near, See near', He in fact saw that Truth of Eternity in my innocent heart, which I could not see it myself.

# சைவப் பெரு நெறியைக் காப்போம்

கேசவன் சொர்ணம்
விரிவுரையாளர் மகாத்மா காந்தி நிறுவனம்

*ஞாலத்தின் புகழே மிக வேண்டும் தென்
நாலவாயி லுறையுமெம் மாதியே திருஞானசம்பந்தர்*

சிவ சம்பந்தமே சைவம் என்பதை உணர்ந்து இன்புறுதற்கு நன்கு அமைக்கப்பட்ட நெறியே சைவ சமயமாகும். யாவர்க்கும் அருளைக் காட்டத் தக்க நெறி இது வன்றி வேறில்லை. என்று தாயுமானவர் கூறியருளினார். பல்லாயிரம் ஆண்டுகளாய் நின்று நிலவி வரும் சைவநெறி அளப்பருஞ் சிறப்பு வாய்ந்தது என்று கண்டு, சைவமாஞ் சாரும் ஊழ் பெறல் அரிது என்று அருள் நந்தி சிவம் அருளிச் செய்தார். இருபத்தோராம் நூற்றாண்டின் நிலையாது எனின், சைவர்களுக்குச் சமய ஞானமும் சமய ஒழுக்கமும் சமய அமைப்புக்களும் நிலைதிரிந்து போனமையால், சைவமக்களுக்குள் ஒற்றுமை உணர்ச்சியும் அன்பொழுக்கமும் பெருங்கொள்கையும் ஆற்றலும் குன்றிப்போயின. சைவரில் பலர் அந்நிய மதத்தினரின் பழக்க ஒழுக்கங்களைக் கைக்கொள்ளுகின்றனர். அதனால் தம்மதத்தில் ஓரளவு வெறுப்பும் புறமதத்தில் விருப்புங் கொண்டுள்ளோர் தொகை பெருகி வருகிறது. மேலும் புறமதத்தினரின் பிரச்சாரங்களும் அவர்கள் செய்கையில் காட்டும் அன்பும், அருளும் கொண்ட நிலை கவனத்திற்குரியவை. இது நீடித்து விடாமல் நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல் என்னும் பொய்யா மொழிக்கு ஏற்ப நாம் சில கடமைகளை உடனடியாக ஆற்ற வேண்டும்.

சைவத்தின் பெருமையையும் சைவர்களிடம் காணும் சிறுமையையும் உணர்தல் முதல் கடமையாகும். இவ் உணர்ச்சி எழவே சமயக் கடமைகளைச் செய்யத் தலைப்படுவர் என்பது திண்ணம். நல்லோர் சிலர் இப்பணிகளில் இறங்கியுள்ளனர். சமய உணர்ச்சி சிலர் மட்டும் விரும்பக் கூடிய அலங்காரப் பொருளன்று. மக்களை விலங்கினின்று பிரித்துத் தெய்வமாக்குதற்கு இன்றியமையாத ஒன்றாகும். உலகத்தில் பல நாடுகளுக்கிடையில் மலிந்து வரும் பகைமை, போர் முதலிய பொல்லாங்குகளால் உலக மக்கள் அனைவரும் மடிந்து போகக்கூடும். இப்பெருங் கேட்டைத் தவிர்க்க வல்லது சமய சக்தி ஒன்றே. ஆகவே ஒவ்வொரு சமயத்தாரும் தம் சமயமாகிய ஆற்றில் ஊற்றுக் குழிதோண்டி, அன்பு நீரைப் பெருக்கி அதனால் உலகில் வளர்ந்துவரும் அசுர குணநெருப்பை அவிக்கப் பெரு முயற்சி மேற்கொள்ளவேண்டும். இத் தொண்டு சைவர்களுக்கும் உரியதே. மிகப் பழையதாகிய இச்சமயம் 21 ஆம் நூற்றாண்டிற்குப் பயன்படுமோ என்ற ஐயத்தைச் செத்தொழிக்கவேண்டும் சைவசமயங் கூறும் பெருங்கடவுள்

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும ப்பெற்றியனே

என மாணிக்கவாசகர் திருவாய் மலர்ந்தருளினார். அது போன்றே அவர் வகுத்தருளிய சைவமும் முக்காலத்திலும் பயன்படும் தன்மையுடையது. இக்காலத்திலும் மக்கள் வாழ்க்கையில் சைவத்தைப்

பண்படுத்த வேண்டுமாயின் சில அடிப்படைக் கொள்கைகளை வற்புறுத்தல் வேண்டும் அவை பின்வருமாறு

அன்பு வடிவாம் கடவுள் ஒருவரே உண்டு. அவர் அதி தூயவர் அவரருளால் தோன்றிய ஆன்மா கோடிகள் யாவரும் சகோதரர்கள்

திருவருட் சம்மதத்தால் பிரபஞ்சம் ஒரு நியதிக்கு உட்பட்டே நடக்கின்றது

மக்கள் தனித்தும் ஒன்று சேர்ந்தும் செய்யும் நன்மை தீமைகள் தத்தம் பயனைத் தந்தே தீரும்

கடவுள் செய் நன்றியை மறவாது அவர்பால் அன்பு செலுத்த வேண்டும்

இடம், மொழி, நிறம், சமய வேற்றுமை கருதாது மன்னுயிர்க்கு உற்ற துன்பந் துடைக்கவேண்டும் சைவம் பிறநாட்டுத் தீமைகளையும் துடைக்க வல்லது. அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியினால் உலகில் கண்டங்கள் அகண்ட நிலமாகி வருகின்றன. இக்கணினி யுகத்தில் இனிமேல் எந்த நாட்டாரும் பிறநாட்டார் தொடர்பின்றி இருக்கமுடியாது. அவரவர் தத்தம் நாகரிகத்தில் கிடைத்துள்ள நல்லியல்புகளைப் பேணிப் பிறருக்குத் தருதலும் பிறர் நாகரிகத்திற் காணும் நல்லியல்புகளைத் தாம் பெறுதலும் கடமையாய் விட்டது. ஆகவே சைவ நன்மக்களும் தம் சமயத்தின் சிறப்பியல்புகளில் சாரமானவற்றை விடாது போற்றிப் பிறருக்கும் உணர்த்துதலும் பிறர்பால் காணும் நலங்களில் தம் முன்னேற்றத்திற்கு வேண்டுவனற்றைத் தாம் கைக்கொள்ளலும் சாலச் சிறந்ததாகும் பிற நாட்டு மூதறிஞர் சைவ சமய உண்மைகளை அறிந்து போற்றுகிறார்கள். இன்னும் அறிய முயல்கிறார்கள் என்பதை உணர்ந்து நாம் பரந்த நோக்கோடு நின்று சிவப்பணியைச் செய்வது நம் கடமையாகும். அது இறைவன் திருவுள்ளப்படி அமையும்.

என்கடன் பணிசெய்து கிடப்பதே


என்று அப்பர் பெருமான் அருளிச்செய்ததனை மறத்தலாகாது

சைவ சமய உண்மைகளை உலகமெல்லாம் பரவும் வகை செய்து, சைவ சமயத்தோர் புறமதம் போதற்கு எண்ணாதவண்ணம் நன்மை செய்வதோடு, சமய உண்மை அறியாது புறம் திரிந்த அன்பர்கள் மீண்டும் சைவம் வரவிரும்பினால் அவர்களை அன்போடு வரவேற்றுக்கொள்ள வேண்டும்

சைவர்கள் தங்கள் சமயக் கடமைகளை நிறைவேற்றி இன்புற வேண்டுமாயின் அவருள் மகளிர் உள்ளாரும் சைவப் பற்றும் சமயத்தொண்டில் பெரு விருப்பங்கொண்டவர்களாய் இருத்தல் வேண்டும். சக்தியின் துணையின்றி சிவம் உபகரிக்குமாறில்லையன்றோ? ஆதலால் இவர்களுள் பலர் மங்கையர்க்கரசியார் தோன்றினால் சம்பந்தரும் குலச்சிறையாரும் தோன்றுதல் ஒருதலை. அதற்கேற்ற கல்வியையும் நாகரிகத்தையும் சைவ மக்கள் தேடித் தரும் கடமை உடையது.

அறிஞர் பெருமக்கள் பொது மக்களுடன் கலந்து, சமயத்தொண்டு சிறப்பாய் நடைபெறுவதற்கான வழிகளைக் கண்டறிந்து பிறருக்கும் உணர்த்திச் செயலாற்ற, எம்பெருமான் திருவருள் புரிவாராக

வாழ்க சைவப் பெருநெறி!



# திருவைந்தெழுத்து

சைவர்கட்கு மூலமந்திரம் திருவைந்தெழுத்து. இதனை வடமொழியில் பஞ்சாட்சரம் என்பர். பஞ்சம்-ஐந்து அட்சரம்-எழுத்து, திருமுறைகளில் எங்கும் பஞ்சாட்சரம் என்ற சொல் இல்லை. அஞ்செழுத்து என்றே கூறப்படுகின்றது. ஐந்து என்ற மூன்று எழுத்தும் மாறிப் போலி எழுத்துக்களாக அஞ்சு என்ற முற்றுப் போலி வடிவச் சொல்லாக இருப்பதற்குக் காரணம் மந்திர எழுத்தை முற்றும் மறைத்துக் கூறவேண்டும் என்ற மரபைப் பின்பற்றியே என அறிதல்வேண்டும் தேவாரம் திருவாசகம் இங்கெல்லாம் நமச்சிவாய என வழங்கும் ஆட்சி காணலாம். நமசிவாய -என்பது வடமொழி வடிவம். நமச்சிவாய-என்பது தமிழ் வடிவம். ச் என்ற ஒற்றெழுத்து எழுத்தாக எண்ணப்படுவது இலக்கணத்தில் கிடையாது. ஆதலின் நமச்சிவாய என்று கூறினும் அது ஐந்தெழுத்தே ஆகும்.



நமச்சிவாய என்பதில்

ந- மறைப்புச் சக்தி( திரோதனம்)

ம- மலம்

சி- சிவம்

வ- அருள்

ய-உயிர்

என விளக்கம் கூறுவர்.

மாணிக்கவாசகர் சிவாய சிவசிவ என்ற இருவகையான ஐந்தெழுத்து மந்திரத்தை ஒரு பாடலில் குறிக்கின்றார் அப்பாடல்

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானால்
அடியேன் உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்.......


உடையாள் உன்றன் நடுவிருக்கும்-சிவசிவ வ- அருட்சக்தி உடையாள் நடுவுள் நீயிருத்தி- வசிவ- (சி- சிவன்) இப்படி சிவமும் சக்தியும் மாறி மாறி உள்ளிருக்கும் படி ஓதவேண்டும் எனில் சிவசிவ எனக் கூற வேண்டும். அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால்..... சிவய சிவய--ய உயிர் உயிருக்கு நடுவில் சிவனும் சத்தியுமிருக்க வேண்டுமெனில் சிவய சிவய என்று ஓதவேண்டும். திருக்கோயிலுள் நாம் செல்லும்போது ஆன்மபோதம் கெட்டுவிடுகின்றது என்பதைக் குறிக்கவே கோயில் கோபுரங்களிலும் மதிற் புறங்களிலிலும் சிவ சிவ என எழுதப்படுகிறது. ய என்னும் உயிர் அங்கே முனைந்து தோன்றுவதில்லை.

KUMARANS

# குமரன்ஸ்

*Imports & Exports*

உங்களுக்கு அன்றாடம்
தேவையான லீலா தயாரிப்புப்
பொருட்களை மொத்த விற்பனை
விலைக்குத் தொகையாக வாங்கி
சிக்கனமடையுங்கள்.




**FREE PARKING AVAILABLE
FOR OUR CUSTOMERS**

**KUMARANS LIMITED
142-144 HOESTREET
WALTHAMSTOW, LONDON E7 4QR**

**TEL:
0208 530 3033
0208 521 4955
0208 521 4411**


**FAX:
0208 530 5655
0208 521 9482**

லீலா தயாரிப்புகளின்
அங்கீகாரம் பெற்ற
விநியோகஸ்தர்கள்

# ஆகம நெறித் தமிழ் வழிபாடு



கயிலை மாமுனிவர்
திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்



பேரூர் ஆதீனம், பேரூர்
கோயம்புத்தூர்

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பது ஔவையின் அறிவுரை. அப்பர் பெருமான் திருக்கோயில் இல்லாத ஊர் திருவில் (திருமகள் இல்லாத) ஊர் என்பார். தமிழ் மக்கள் வாழ்வியல் தொன்று தொட்டுத் திருக்கோயிலோடு இணைந்தது. சமயம், கலை, பண்பாடு, வரலாறு, எல்லாம் பிரிக்கமுடியாத வகையில் இணைந்தது. சமயம், கலை பண்பாடு, வரலாறு, எல்லாம் பிரிக்கமுடியாத வகையில் அமைந்திருப்பது கண்கூடு சங்க இலக்கியங்களும் சிலப்பதி காரமும் அக்காலத்தில் அமைந்திருந்த பல்வேறு தெய்வங்களின் கோயில்களையும் வழிபாட்டு மரபுகளையும் எடுத்துரைக்கின்றன. இன்று வரை திருக்கோயில்களும் வழிபாட்டு முறைகளும் தொடர்ந்து வளர்ந்து கொண்டே வருகின்றன. இத்தகைய திருக்கோயில்களைக் காலங்காலமாகக் கட்டிக்காத்து வரும் பணியில் ஈடுபட்டிருப்போர் அங்கு வழிபாடு செய்யும் பணியில் உள்ளவர்களே என்றால் அது மிகையன்று. வறுமையான சூழலில் வாழ்ந்தாலும் தம் கடமைகளை அயராது தொடர்ந்து செய்யும் பூசாரிகளாகிய இவர்களுக்குத் தமிழ்ச் சமுதாயம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. வழிபாடு செய்யும் பணி எளிமையானதன்று. அதிலும் திருவிழா நாட்களில் அவர்களுக்கு ஓய்வு என்பது சிறிதுகூட இருக்காது. மேலும் சமயம் தொடர்பான நெறிமுறைகளில் பொதுமக் களுக்கு ஐயம் ஏற்படும்பொழுது அதைத் தீர்த்து வைக்கும் பொறுப்பும் இவர்களையே சாரும். சமய நெறியே மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்து வீடுபேறு அடையும் வழி முறையைக் காட்டும் உயர்ந்த நெறியாகும். எனவே அத்துறையில் ஈடுபட்டிருக்கும் பூசைசெய்வோர், மற்றவர்களுக்கு வழி காட்டியாகத் திகழவேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அதற்கேற்ற முறையில் வழிபாடு செய்வோர் தம்மை வைத்துக் கொள்ளவேண்டும். அதிகாலையில் நீராடிச் சமயச் சின்னங்களான திருநீறு,

உருத்திராக்கம், முதலியவற்றை எப்போதும் அணிந்து கொண்டிருத்தல், தீய பழக்கவழக்கங்களான புகை, மது, புலால் முதலியவற்றை நீக்கி இருத்தல், முதலியன இவர்களுக்கு உரிய நெறிகளாகும். மேலும் திருக்கோயிலை உள்ளும் புறமும் தூய்மையாக வைத்துக் கொள்ளவும் இவர்களே வழிகாட்டியாக இருத்தல் வேண்டும். வழிபட வருவோர் மகிழும் வண்ணம் நடந்துகொள்வது எல்லாவற்றையும் விட இன்றியமையாததாகும். அயற் சமயம் புகுவாரைத்தடுத்து நன்னெறி காட்டும் பணியையும் செய்வது நலமுடையதாக இருக்கும். பெருங்கோயில்களில் நடைபெறும் வழிபாடு களைப்போல் சிறுகோயில்களிலும் நடைபெறும் வழிபாடுகளும் பொருள் பொதிந்தனவே. கிராமப்புறங்களில் அமைந்துள்ள திருக்கோயில்களில் பலவிதமான வழிபாட்டு முறைகளைக் காணலாம். குறிப்பாக தீச்சட்டி எடுத்தல், தீ மிதித்தல், கம்பம் நடுதல், என்ற மூன்றும் நெருப்பைப் போற்றும் மரபுடையன. கம்பத்தின் மூன்று கிளைகள் முத்தீயைக் குறிப்பதாகவும் அமைகின்றது. தீமிதி, தீச்சட்டி என்பன இறைவனை அடைய எத்தகைய துன்பமானாலும் எனக்கு ஒரு பொருட்டல்ல என்பதை உணர்த்தும் பாங்குடையன. இதேபோல் உப்பு மிளகு முதலியவற்றை இறைவிக்கு முன்னால் கொட்டும் மரபையும் சில கோயில்களில் காணலாம். உப்பு நன்றியின் அடையாளம். மிளகு வளமையின் அடையாளம். சுவை சேர்ப்பவை. இது வழிபடுவோர் நன்றியுடன் தமது செல்வத்தையும் படைத்து மகிழும் பொருளுடையது. முளைப்பாரிச் சடங்கும் பொங்கல் வைக்கும் மரபும் இவற்றைப்போலவே இறைவனுக்கு, வாழ்வில் வளம் பெருக்க நன்றி செலுத்தும் வழிபாட்டு மரபுகளே. விழாநிறைவில் நடைபெறும் மஞ்சள் நீராட்டு சுகாதாரத்தின் அடிப்படையாகும் இவற்றையெல்லாம் பேணிவரும் பொறுப்பு டையவர்கள் பூசைசெய்வோரே ஆவர்.

இவ்வாறு பல மரபுகளையும் நமது பழம் பெருமைகளையும் சிறப்புடைய பூசை செய்வோர் தக்க முறையில் வழிகாட்டும் நோக்கில் இச்சிறு நூல் ஆக்கப் பட்டுள்ளது. இது இரு பகுதிகளைக் கொண்டது. முற்பகுதி எளிமையான முறையில் வழிபாட்டு முறைகளை விளக்குகின்றது பிற்பகுதி, இதில் தெளிவு பெற்றவர்கள் வழிபடும் மரபினை விரிவாக அறிந்து கொண்டு பயன்பெறும் நோக்கில் அமைகின்றது. ஏற்கனவே முறையாக வழிபாடு செய்வோர் இவற்றைக் கற்று மேலும் முழுமையாகத் தெரிந்து கொள்ளலாம். அடிப்படையில் விரிவாகத் தெரிந்து கொள்ள இவ்விரு பகுதிகளும் பயன்படும். சிறப்பு வழிபாடு (திருவிழா, திருக்குடநன்னீராட்டு விழா முதலியன) செய்யப் பலவற்றை நேரில் பார்த்தும் பழகியும் தெரிந்து கொள்ளவேண்டும். கலசம் வைத்தல் வேள்வி செய்தல், திருமேனிகளைத் தூய்மை செய்தல் கொடியேற்றுதல், எண்வகை மருந்து சாத்துதல் முதலியவற்றை நேரில் பார்த்து பழகித் தெரிந்து கொள்வதே பயனுடையதாக இருக்கும். இதே போல் பெருந் திருமஞ்சனம் செய்யும் முறையையும் பெரும் பேரொளி முறையையும் அறிந்து கொள்வது எல்லாவற்றையும் தொடர்ந்து முயன்று தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு தம்மைத் தகவமைத்துக் கொண்டால் மதிப்பும் மரியாதையும் உயர்வடைவதோடு இச் சமுதாயத்திற்கும் பெருந்தொண்டாற்றிய பெரு மையும் சேரும் என்பது திண்ணம்.

திருக்கோயில் வழிபாடு செய்வோர் (பூசை செய்வோர்) பின்பற்றவேண்டிய இன்றியமையாத ஒழுக்கங்கள்.

திருக்கோயில் வழிபாடு செய்வோர் கடவுளின் திருமேனிக்குப் பொலிவு செய்யும் பேறுபெற்றவர்கள். எனவே அற்குரிய தகுதிகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் அவையாவன

இறைவன் அன்பே வடிவானவன், புலால் உணவு பிறஉயிர்களைத் துடிதுடிக்கக் கொல்வதால் கிடைப்பது. எனவே கடவுள் தன்மைக்கு மாறான புலால் உணவைத் தவிர்க்கவேண்டும்.

குளித்துத் திருக்கோயிலுக்குச் செல்க.

திருநீறு, உருத்திராக்கம், திருமண், துளசிமாலை, முதலிய சயச் சின்னங்களில் ஏற்புடையனவற்றை அணிந்து தூய்மையான ஆடைகளையே உடுத்துக.

திருக்கோயிலுக்கு வருவோரிடத்தில் அன்போடும்

பொறுமையோடும் நடந்து கொள்க.

திருக்கோயிலுக்குள் தூய்மைக்கு மாறானவை நிகழாமல் பார்த்துக்கொள்க.

திருக்கோயில், அதன் சுற்றுப்புறம் நந்தவனம், நீர்நிலைகள், தெய்வத் திருமேனிகள், திருக்கோயில் பொருட்கள் போன்றன தூய்மையாக இருக்கும் படி பார்த்துக்கொள்க.

தொன்று தொட்ட வழக்கம் என்ற வகையில், திருக்கோயில்களில், ஆடு, கோழி, பன்றி முதலியவற்றைப் பலியிட்டு படைப்பது, மது வகைகள், புகையிலை, சுருட்டு போன்றவற்றைப் படைப்பது அருட்தன்மைக்கு மாறானவை. எவ்வுயிரும் பராபரன் சந்நிதியாகும். இலங்கும உயிரனைத்தும் ஈசன் கோயில் என்பதை உணர்க.

**திருக்கோயில் வழிபாட்டு முறை.**

திருக்கோயிலில் வழிபாடு செய்வோர் பூசைக்காலங்களில் திருக்கதவினைத் திறக்கும் போது

**கண்ணினால் உமைக் காணக் கதவினைத்**
**திண்ணமாகத் திறந்தருள் செய்மினே**

எனவேண்டுக.

கதவினைத் திறந்து பின்னர் கருவறையில் விளக்கேற்றி

***எது எமைப்பணிகொளும் ஆறது***
***கேட்போம் எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.***
***எனப்பாடி ஒளிகாட்டுக.***

திருமுழுக்காட்டிற்கு(அபிடேகம்)முன்னர் முந்தைய நாள் சூட்டிய மலர்களை கால் மிதிபடாத இடத்தில் கொண்டு போய்ப் போட வேண்டும். இறைவழி பாட்டுக்குப் பயன்படுத்துவனவற்றைத் தூய்மை செய்து வைக்கவேண்டும் அபிடேகத்திற்குரிய தண்ணீரைத் தூய்மையான இடத்திலிருந்து கொண்டு வருக. வழிபாட்டிற்கு மலர்கள், இலைகள், (பத்திரங்கள்) தூய்மையான இடங்களிலிருந்து கொண்டு வந்து கழுவியபின் பயன் படுத்துக. பிள்ளையார் முதல் வழிபாட் டிற்குரியவர். எனவே திருக்கோயில் வழிபாட்டில் முதலில் அவரை வழிபடவேண்டும் பிள்ளையாருக்குத் திருமஞ்சனமாட்டி ஆடை திருநீறு சந்தனம் குங்கும் மலர் மாலைகள் அணிவித்து அலங்கரிக்கவேண்டும். நீராட்டும்போது

நெஞ்சகமே கோயிலாக நினைவே சுகந்தம் அன்பே
மஞ்சன நீர் பூசைகொள்ள வாராய் பராபரமே.

என்று பாடுக. திருமேனியை அலங்கரிக்கும்போது மேற்கண்ட பாடலையே திரும்பவும் கூறலாம் உன்னை அலங்கரித்து உன்அழகுபாராமல் என்னை அலங்கரித்து ஈடிழந்தேன் பூரணமே எனப்பாடுக. இறைவனைத் திருமஞ்சனம் செய்வதற்கு அபிடேகப்பொருட்களில் கிடைத்தவற்றைப் பயன் படுத்தலாம் நல்லெண்ணெய், ஆனைந்து,(பால், தயிர், நெய், கோசலம், கோமயம் ஆகியவற்றின் கலவை) திருமஞ்சனப்பொடி,மஞ்சல்பொடி, பஞ்சாமிர்தம், நெய், பால் தயிர், தேன் கருப்பஞ்சாறு, பழவகைகளின்சாறு இளநீர், சந்தனம், பன்னீர், திருநீறு முதலியன. ஒவ்வொரு அபிடேகத்தின் போதும் மலரிட்டு கைவிளக்குக்காட்டி அபிடேகம் செய்க. பழமும் படைக்கலாம் வழிபாட்டின் தொடக்கத்தில் இறைவனுக்குச் சாம்பிராணி, ஊதுபத்தி, குங்கிலியம், நறும்புகை காட்டுக. அப்போது சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் என்று கூறுக. அடுத்தது கைவிளக்கினை இறைவனுக்கு முன்பு மூன்று முறை வலமாக ஓம் வடிவில் சுற்றிக்காட்டவேண்டும். அப்போது ஒளிவளர் விளக்கே போற்றி, என்றும் நல்லக விளக்கது நமச்சிவாயவே என்றும் கூறுக. திருவமுதூட்டும் போது அடியார்க்கு ஆரமுது ஆனாய் போற்றி என்றுகூறி கையில் பூ, நீரெடுத்து திருவமுதைத் தொட்டுக் காட்டுக. நெய்விளக்கு, அல்லது கற்பூர ஒளியை முன்பு சொல்லியபடி மூன்றுமுறை வலமாகச் சுற்றிக் காட்டுக. அப்போது ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் போற்றி என்று கூறுக.

தமிழ் அர்ச்சனை- அருள்வேண்டுதல்(சங்கற்பம்)

நாளும்கோளும் நன்னிலை பொருந்திய இந் நாளில் ------------------ அவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தாருக்கும் சுற்றத்தார்க்கும் சமூகத்தார்க்கும், உலகுயிர்கட்கும், அறம், பொருள்,இன்பம் வீடு எனும் நாற்பயனும் பொருந்திய நன்னிலை எய்தவும், நீண்ட வாழ்நாள் பெருகவும், திருவருள் பெருகவும், மங்கல வாழ்வெய்தவும் உமது திருவடிகளில் மலர் தூவி வழிபாடு செய்கின்றோம் என்று கூறி மலரிட்டுப் போற்றுக.

இதன் பின்னர் அந்தந்த தெய்வங்களுக்குரிய போற்றிகளைச் சொல்லி மலரிடுக. அறநிலை யத்துறை வெளியிட்டுள்ள போற்றிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்

எட்டு பதினாறு, நூற்றெட்டு எனக் காலத்திற்கேற்ப போற்றுக.

நிலவுலகினில் நிலைபெற (இறைவன் துதி)

**புவம்வளி கனல்புனல் புவிகலை யுரைமறை திரிகுண மமர்நெறி**
**திவமலி தருசுரர் முதலியர் திகழ்தரு முயிரவை யலைதம**
**பவமலி தொழிலது நினைவொடு பதுமநன் மலரது மருவிய**
**சிவனது சிவபர நினைபவர் செழுநிலனினில் நிலைபெறுவரே**

இடர்கள் நீங்க

**நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக் கருத**
**என்னடியா னுயிரைவவ்வே லென்றடற் கூற் றுதைத்த**
**பொன்னடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும்**
**நின்னடியா ரிடர்களையாய் நெடுங்களமேயவனே**

செய்வினை நீங்க

**அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு ம:.தறிவீர்**
**உய்யவினை நாடா திருப்பது முந்தமக் கீனமற்றே**
**கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமாட்டுயாம்**
**செய்வினை வந்தெம்மை தீண்டப் பெறா திருநீலகண்டம்**

கோள்களால் வரும் துன்பம் நீங்க

**வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணை தடவி**
**மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென் உளமேபுகுந்த அதனால்**
**ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி சனிபாம்பிரண்டு முடனே**
**ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே**

எல்லா நலன்களும் பெற ( அம்மை துதி)

**தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வுஅறியாத**
**மனம் தரும் தெய்வவடிவும் தரும் நெஞ்சில்வஞ்சமில்லா**
**இனம்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே**
**கனம் தரும் பூங்குழ லாள் அபிராமி கடைக்கண்களே.**


# SHIPPING - AIR FREIGHT - TRAVEL

**UNACCOMPANIED BAGGAGE - PERSONAL EFFECTS, HOUSEHOLD GOODS, VEHICLES, MACHINERY ETC.**

**TO COLOMBO AND OTHER WORLD WIDE DESTINATIONS**

**MAIN AGENT FOR SRILANKAN AIRLINES**

PASSENGER TICKETS AND UNACCOMPANIED BAGGAGE

All Your Goods Go To Our Bonded Warehouse in Colombo

**WE WILL ALSO FLY YOU ANYWHERE, ANYTIME ON SCHEDULED FLIGHTS AT LOW PRICES**

SriLankan

**14 Allied Way, off Warple Way, Acton, London W3 0RQ**

SriLankan

# GLEN CARRIERS LIMITED

**Tel: 0208 740 8379/ 0208 749 0595**

**Fax: 0208 740 4229**

**BONDED WARE HOUSE**

**LAKSIRISEVA , 66 NEW NUGE RD, PELIYAGODA**



# அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் சிவயோகம்



## திருமண மண்டபம்

ஐந்து வருடங்களில் 500 திருமணங்களைக் கண்ட இராசியான திருமண மண்டபம்.

500 இருக்கைகள்

அழகிய புதிய முத்து மணவறை, அலங்கார ஜோடனைகள், இசைக் கருவிகள் உணவு வசதிகள் சகலதும் சிறந்த முறையில் அமைந்துள்ள இலண்டனில் உள்ள ஒரே ஒரு திருமண மண்டபம்

தொடர்புகட்கு:

நிர்வாகி முத்துமாரி அம்மன் திருக்கோயில் சிவயோகம்

தொலைபேசி: 0208 767 9881

தொலைநகல்: 0208 767 2337

# மாதமொருமுறை கலசம்

## 38 ஆவது கலசத்திலிருந்து உங்கள் கலசம் மாதமொருமுறை வெளிவரவிருக்கின்றது.

## கலசம் சந்தாப் படிவம்

............................................................................

ஆகிய நான் கலசத்தின் சந்தாதாரராக விரும்பி இத்துடன்

.......................... பவுண்களுக்கான காசோலையை இணைத்துள்ளேன். கலசத்தை பின்வரும்

............................................................................

.................................................. முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றேன்.

என்னுடைய தொலைபேசி இல: ..................................................

கலசம் சந்தா விபரம்: பிரித்தானியா 10 பவுண்கள் (இருவருடம்)

ஐரோப்பிய நாடுகள்: 20 பவுண்கள் ஏனைய நாடுகள்: 40 பவுண்கள்




ATN JEWELLERY

Finest Quality 22ct. Gold & Diamond Jewellery


சகலவிதமான அமைப்புகள் கொண்ட புதுப்புது நகைகளை மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

TEL: 0208 521 9767

FAX: 0208 521 1281

37 PALMERSTON ROAD, WALTHAMSTOW

LONDON E17 6PR



S

# SCINCE AND SAIVAM

Dr(Mrs) K. Padmini

Today I am going to narrate few instances in the lives of 63 saiva saints called Thiruthondars or Nayanmars, who lived before and during the times of saint Sundarar of 8th century accoding to scholars.

Though it is essentially a work on the devotion of Saiva Saints, it dose throw interesting light on some rare thoughts to a medical practioner like me. I thought I should bring them to your attention. Some of the medical findings we consider of recent origin were already well known to the people of that age. I propose to deal with few aspects of medical facts as posed by Periyapuranam in this paper.

Sekkizar who lived in chidambaram during the later part of his life, was a minister to the chola ruler kulothunga 11 in the mid 12 th century about 800 years ago. Compiled and wrote the great epic PERIYAPURANAM. The lives of saiva saint and the society he depicted gives us glimpse of faith,belief and devotion of the people who lived at that period.

Now let us dicuss the topic in the following aspects.

* Power of prayer-Infertility
* Sacrifice& self control
* Breast feeding
* Spacing between two children and contraception
* Birth of female child
* Transplantaion of human organs
* Environmental and community welfare

## POWER OF PRAYER - INFERTILITY

Inferlity is a problom that brings severe mental depression and unhappiness among married couples. We use all morden technologies to over come this problem. Yet the psychological factor plays a great role in solving this problem. The power of the prayer does help the couple to get a child,in some cases.(like unknown causes of infertility).I shall cite two instances from periyapuranam,One relates to the birth of saint thirugnanasambandar and other the hunter saint Kannappanayanar. The parents of these two saints,had no children for long time.But with steadfast devotion to siva,and by observing a strict deciplined life they got a child. The children later blossomed into great saints. Periyapuranam,narrates in detail the observances and prayers of these couples as the main cause for the birth of children to serve for the well being of the world. With love for God and prayers on their lips,the two couples over came the proplem of infertility.Even though this is the time for the test tube babies,when we do a procedure we success with deep sincerity and devotion for couple to be blessed with a child. There is no doubt that the sincere prayer will be answered.

## SACRIFICE & SELF CONTROL

Motherhood is a virtual rebirth for a woman. It is known how difficult it is to bear the labour pain. When Queen Kamalavathy,the mother it is to bear the labour pain. When Quneen Kamalavthy,the mother of kochengannan had her labour pain, an astrologer told her that if the child was born some time later he would do great service to Saiviam and build many temples.

It was a call to delay the delivery. The expectant mother was ready to make a supreme sacrifice for the sake of the child. She requested her maids to lift her up and hang her upside down against gravity. She suffered,struggled and bore her labour pain and prolonged the delivery and gave birth to a child at the expected auspicious time. With tears in her eyes,she looked at her child who had red eyes,due to prolonged and obstructed labour. She called him kocheganna. ko means 'son' chenganna is 'red eyes' and after naming him,she collapsed with sigh of relief. What a supreme sacrifice of mother. What a supreme sacrifice of mother kamalavthy. This child grew to become the celebrated chola king kochenganna who built nearly about 78 and beautiful temples.

To day everyone wants painless labour and the perception for pain has come down very much. Even though we have powerful anesthesia,we teach the relaxation techniques and prepare them mentally.Yet the outcome is very poor. The roll of will power is reduced to greater extent.

The message we should take is that tolerance and determination are great and they are applicabile to all women round the globe.

## BREAST FEEDING

We empahasize breast-feeding in modern times. The importance of breast milk is brought out vividly in periyapuranam in the life of Thiruganasambandar. When

Thirunanasambandar was a three years old child,he cried becouse of hunger. Lord Shiva and Parvathy appeared before him. Goddess Parvathy gave her breast milk in a cup to the child.
We very strictly advice our patients to give only breast milk and if there is any (sore nipple)local cause we advise them to express breast milk and feed the child with a spoon. The mother's loving touch strenghthens the bond he between her and the child. Having tasted the breast milk(thirumulaippal of Ambal) the three years old child,developed extraordinary skill in composing devotional poems in praise of lord Shiva.
The breast milk taken gave them enough immunity,resistance and strength. We also advise the same thing now.
We celebrate world breast feeding day now which was in existence in the ancient society. Emphasis was laid on feeding the mother's breast milk. That event is being celebrated for the past one thousand and four hundred years as a great festival. Even to this day it is celebrated at Sirkazhi, 20 km from this town chidambaram.

## SPACING AND CONTRCEPTION

The concept of spacing between two children is very much emphasised today. Periyapuranam seems to point this concept practised in those days. Women used breast feed the children for a minimum of 2 to 3 years. this Breast feeding in about 50 % of women produced anovulation and there by prevented pregancy. The same concept of spacing is well protrayed in the life of pugazhanar were the parent of saint Appar and his sister thilagavathiyar in periyapuranam.

## BIRTH OF FEMELE CHILD

Today with help of CVS biopsy and USG every one inquisitive to know the sex of the child. Now the worst part is that people terminate if it is a female baby. The birth of female baby was not considered as a burden to the society of those days. It was considered as a boon to the socity. Which is very well explained in Manakanjarar's( saiva saint)life. When he had the first female baby,the whole family even the whole village was very happy & jubilant. He said the baby had come to uplift his life.

## TRANSPLANTATION OF HUMAN ORGANS

Long back when we spoke of "eye donation" & "organ transplant"proper recognition was not given and people gave importance only to blind adherence to rituals. Significant changes have occurred not only in the scientific field but also in the attitude of morden man. Right from the 19 th century this organ donation and transplant have gained importance and acceptance. If we ponder over this we,will come to realize that Kannappa Nayanar Puranam( saiva saint) speaks of eye donation.
When this saint saw the eye of lord Siva bleeding he tried to stop it by applying some medicinal herbs. When it did'nt stop he panicked,but without any second thought,he gorged his eyes and placed it on the bleeding eye of the eye of the Lord Siva. This gave him boundless joy. His selfless love for Lord Siva made him attain sainthood within 6 days.

Today the slogan in vogue is "Donated Blood when your are alive and donate on organ after your death". This of course will bring life and happiness to the recipent.

## ENVIRONMENTAL& COMMUNITY WELFARE

Now let us see how confidence can be installed in a physically handicapped person. An incident in periyapuranam proves that how a blind man can serve the community. Thandiyadigal a blind saiva saint loved Lord Siva to the core and his second love was the welfare of the environment and community.

A pond in his village was encroached by the samanapalli. A pond is a source of life to a village. You can imagine how the people would have felt.When it was polluted, this blind saint to take steps to clean the pond. He took a stick and placed in the center of the pond. He took another and placed it in the periphery of the pond. The top end of both the sticks were connected with the rope. Little by little he dug the pond and carried the mud in vessel on his head chanting the Namachivaya mantra. The only guidance to know the way was the rope. At that time no one could predict that his great will power and determination would find him a place in periyapuranam.

The confidence is what we need now to motivate and encourage the physically handicapped person. there are certain in built talent and given gifts which have to be tapped from a handicapped person. This type of selfless service in the handicapped person was found even in the ancient times. To conclude " Periyapuranam" has given a great insight and points to ponder for the morden doctor.



# எனது பக்கங்கள்

# ஒரு குளிர்மையான இனிய ஈழப் பயணம்

பதினேழு வருடங்களுக்குப் பின் நான் பிறந்த மண்ணில் கால் பதிக்கப் போகிறேன் என்ற பரபரப்பில் மனம் தவித்துக் கொண்டிருந்தது.

விமானம் எவ்வித பிரச்சினைகளுமின்றிப் பறந்து கொண்டிருந்தது.

மனதுக்குள் ஒருவிதமான பயம்.

இதயத்தில் ஒருவிதமான நடுக்கம்.

அழகான பணிப்பெண்கள் சிட்டுக்களாகப்பறந்து பயணிகளின் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள்.

விமானத்தின் ஒலிபெருக்கி நாங்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தின் மேலாகப் பறந்து கொண்டிருப்பதாகவும் இன்னும் சில நிமிடங்களில் தரை இறங்கப்போகிறோம் என்றும் அறிவித்தது.

இவ்வவளவு நேரம் உறவாடிவந்த வானத்தை யன்னலூடாகப் பார்த்தேன்.

வானம் நிர்மலமாக இருந்தது.

இப்படி எத்தனைபேரை அது நித்தமும் பார்க்கிறது.

விமானத்தில் ஒரு குலுக்கல்.

காதுகளில் ஒரு அடைப்பு.

விமானம் ஓடுபாதையில் இறங்கிவிட்டதற்கான அறிகுறிகள் இவை. எல்லாரும் ஆரவாரித்துக் கைதட்டினார்கள்.

நானும் தட்டிக்கொண்டேன்.

எனது குடும்பம் இறங்குவதற்குத் தயாராகிக்கொண்டது.

மனதிற்குள் ஒரு இனம்காண முடியாத பரபரப்பு!

எத்தனை வருடங்களுக்குப்பிறகு வருகிறேன்!

எத்தனை நிகழ்வுகள்–எத்தனை தொலைப்புகள் இத்தனை வருடங்களில் நடந்திருக்கவேண்டும்.

போகிறேன் வருவேனா என்று அப்போ போகும்போது நினைத்ததை நினைவுக்குக் கொண்டுவந்தேன்.

இதோ வந்துவிட்டேன் என்று மனம் துள்ளிக்குதிக்க ஆரம்பித்துவிட்டது.

விமானத்தைவிட்டு வெளியேற ஆரம்பித்தோம்.

வாசலில் விமானப்பணிப்பெண்கள் சிரித்த முகத்துடன் நின்று வழியனுப்பி வைத்தார்கள்.

அவர்கள் ஆயுபோவன் என்று வணக்கம் சொல்லி விடைதந்தார்கள்.

இதைக் கேட்ட என் மகன் அப்பா அவர்கள் யாரையோ தேடுகிறார்களா என்று என்னைக்கேட்டான்.

எனக்குப் புரியவில்லை.

மீண்டும் விளங் காத முகத்துடன் அவனைப் பார்த்தேன்.

அப்பா அவர்கள் Are you Bavan? என்று கேட்கிறார்கள் அதுதான் சொன்னேன் என்றான்.

எனக்கும் மனைவிக்கும் அப்பதட்டத்திலும் அடக்கமுடியாத சிரிப்பு வந்துவிட்டது.

எம்மைமறந்து நாம் எல்லோரும் சிரித்தோம்.

பரபரப்பிலும் ஒரு சிரிப்பு.

கடவைப் புத்தகங்கள் பரிசோதிக்கும் இடத்துக்கு வந்தோம்.

புத்தகத்தையும் எங்களையும் மாறிமாறிப் பார்த்தார்கள்.

ஒன்றுமே நடக்கவில்லை. அவர்களுக்கும் நல்ல நித்திரைச் சோம்பல். போனால்போதும் என்ற நிலை.

வெளியில் வந்துவிட்டோம்.

எங்களுக்காகக் காத்துநின்ற வாகனத்தில் ஏறி

திருகோணமலைக்கான பயணத்தைத் தொடர்கிறோம்.

வாகனத்தின் யன்னலூடாக என் கண்கள் எதையோ தேடுகின்றன.

பதினேழு வருடங்களுக்கு முன் நான் விட்டுச் சென்ற பலவற்றைக் காணாதது போன்ற ஒரு தவிப்பு!

அதே நேரம் நான் விட்டுச் செல்லாத பல புதியவைகள் இருப்பன போன்ற ஒரு பிரமிப்பு.

வாகனத்தை இடையில் ஒரு கடையின் முன் நிறுத்துகின்றார்கள்.

அது ஒரு சிங்கள இனத்தவரின் கடை.

மனதுக்குள் ஒரு பதட்டம் என்னை அறியாமலே எனக்கு ஏற்படுகின்றது.

இப்பதினேழு வருடகாலத்தில்

சிங்களவர்களைப்பற்றிய செய்திகளும் கொழும்பில் இருந்தபோது 1983 கலவரத்தில் சிங்களக்

காடையர்கள் நடந்து கொண்ட முறைமையும் என் மனதில் சிங்கள மக்களைப்பற்றி மிகமிகத் தவறான எண்ணங்களையே தோற்றியிருந்தன. ஆனாலும் எல்லா சிங்களவர்களும் அப்படி அல்ல என்கின்ற ஒரு நினைவும் அப்போது என்னுள் ஆழமாக வலுவூன்றியிருந்தது.

ஆனால் வெளிநாட்டுக்கு லந்து முற்றுமுழுதாக நாட்டுத் தொடர்பு அற்றுப்போய் வெறுமனே செய்தி ஊடகங்களினூடாகவே நாட்டைத் தரிசித்துக் கொண்டிருந்ததனாலோ என்னவோ சிங்களவர்களைப் பற்றிய எல்லாரும் அப்படி அல்ல என்ற என் எண்ணம் அறவே அற்றிருந்தது. மாறாக அவர்கள் கொடியவர்கள் என்ற எண்ணமே மேலோங்கி இருந்தது.

இதனால் சிங்களவர்களின் கடைக்கு முன்னால் வாகனம் நிறுத்தப்பட்டதும் நான் கலங்கிப்போனேன் என்றுதான் சொல்லவேண்டும்.

இதை யாருக்குமே காட்டிக் கொள்ளாமல் உணவின் மீது வெறுப்பைக் காட்டி வீட்டை போயச் சாப்பிடுவம் என்று கூறி அவர்களை அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்துவதில் கண்ணுங்கருத்துமாயிருந்தேன்.

அதிலே நான் தோற்றுப் போனேன். அவர்களுக்கு என்னிலமை புரியவில்லை. அதே நேரம் அங்கு வாழுகின்ற அவர்களுக்கு என்னுடைய அந்தப் பய நிலைமை இல்லாமலிருந்தமையும் ஒரு காரணம்.

என்னைக் கூட்ட வந்த என் மனைவியாரின் தம்பியும் வாகனச்சாரதியும் சரளமாக கடைக்காரர–ிடம் சிங்களத்தில் உரையாடினர்.

நட்பு ரீதியான அந்த உரையாடலும் அந்தக் கடைக்காரர் ரொட்டியினை எங்களுக்குக் கொண்டுவந்த முறைமையும் எங்களோடு உரையாட அவர் எத்தனித்த பாங்கும் என்னை வியப்பிலாழ்த்தின.

ஒரு வகையாகச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு புறப்பட்டோம்.

திருகோணமலைக்குப்போகும் வழியில் இராணுவத்தினரின் கெடுபிடிகள் உண்டா என்று அவர்களைக் கேட்டேன்.

உண்டு ஆனால் பயமில்லை என்று சொன்னார்கள்.

அதெப்படி என்று திரும்பக் கேட்கிறேன்.

எங்களுக்குப் பழகிபபோச்சுது . உப்பிடி எத்தனை பிரச்சினையை நாங்கள் கண்டிட்டம். நீங்கள் ஏன் உப்பிடி எல்லாம் யோசிக்கிறியள் என்று என்னை ஆசுவாசப்படுத்தினர்.

நானும் மனதைத் தேற்றிக் கொண்டேன்.

திருகோணமலையை நெருங்க நெருங்க இராணுவத்தினரைக் காணும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

பல இடங்களில் நிறுத்தினார்கள்.

கடுமையாக அவர்கள் நடக்கவேயில்லை.

கடவைச் சீட்டைப்பார்ப்பார்கள். பொருட்களையும் பார்ப்பார்கள். பொருட்களைக் குலைத்துக் கூடப்பார்க்கவில்லை. ஒரு படியாக நாலைந்து பரிசோதனைச் சாவடிகளைத் தாண்டி திருகோணமலையைச் சென்றடைந்தோம்.

எனது மனைவியின் தம்பியார் வீட்டில்தான் நாங்கள் தங்குவதாக ஏற்பாடு. வீடு நெருங்க நெருங்க என் மனைவிக்கு ஒரே பதட்டமாக இருந்தது. பதினேழு வருடங்களுக்குப்பிறகு தன் பெற்றோர்களைக் காணப்போகின்றோமே என்கின்ற தவிப்பு.

அவர்களின் வீட்டிற்கு நேர் எதிரே வில்லூண்டிக் கந்த சுவாமி கோவில் இருக்கிறது.

கோயிலின் மணியோசை கேட்டது.மனதுக்கு நிம்மதியாக இருந்தது. வாகனத்தைவிட்டு இறங்கி உள்ளே சென்றோம்.

(இன்னும்வரும்.............)

# Prabas பிரபாஸ்

32 Woodford Ave, Gantshill Ilford, Essex IG26XQ

**Tel: 0208 550 4566**

## Ilford, Gantshill, Newbury park, Redbridge, Chigwell, Clayhall

மற்றும் அதனை அண்டிவாழும் தமிழ் மக்களுக்கோர் நற்செய்தி.

உங்கள் அன்றாடதேவைகளை நிறைவாகவும் தரமாகவும் பூர்த்தி செய்ய பிரபாஸ் நிர்வாகம் காத்திருக்கின்றது. ஒரு முறை விஜயம் செய்து பாருங்களேன்

உங்கள் வீட்டுக்குத் தேவையான மளிகைப் பொருட்கள், இலங்கை இந்திய மரக்கறிவகைகள் அத்துடன் தமிழ், ஹிந்தி, மலையாள, ஆங்கில திரைப்படங்கள் , சீடீக்கள் அனைத்தும் வாடகைக்கும் விலைக்கும் பெற்றுக் கொள்ளலாம்.

**PHONE CARD க்கு 20 வீத கழிவு உண்டு**

## CINE ZOOM VIDEO MAKERS & CINE STILL PHOTOGRAPHERS

சினி ஸூம் வீடியோ மேக்கர்ஸ் உங்களின் மங்களகரமான வைபவங்கள் நாட்டிய அரங்கேற்றங்கள், நாடகங்கள், டீவி தொடர்கள் மற்றும் இசை நிகழ்ச்சிகள் போன்ற அனைத்துத் தேவைகளுக்கும் புதிய Digital Graphic Computerised நுட்பங்களைப் பயன்படுத்தி சினிமாத் துறையில் அனுபவம் கொண்டவர்களால் உங்கள் வீடியோ படம் நிழற்படம் எடுத்துத் தரப்படும்.

**Tel:**

**07949 240265**

**07904 25826**




**உங்கள் எண்ணங்கள் எங்கள் கைவண்ணத்தில்**

* மனம் கவரும் தங்க நகைகள்
*தங்கம் - கரட் உத்தரவாதம்
*உங்கள் தேவைகளுக்கேற்ற வண்ண நகைகள் பிரத்தியேகமாய் தயாரிக்கும் வசதிகள்

*தாலி - பொன்னுருக்கல் வசதிகள்
* சாத்திர விதிகளுக்கு ஏற்ப நவரத்தின மோதிரங்கள் ஓடர்களுக்குச் செய்து கொடுக்கப்படும்

புன்னகைக்கு நிகர் எங்கள் பொன்னகையன்றோ!

# றோயல் ஜுவல்ரி

**287, HIGH STREET NORTH , EAST HAM,
MANOR PARK, LONDON E12 6SL**

**Tel: 0208 472 5500 Fax: 020 8472 5687**

உங்கள் தேவையே எங்கள் சேவை.

லண்டனில் முதலாவது தமிழர் நகைமாளிகை

# WESTERN JEWELLERS

Specialist in 22 ct. Gold Jewellery



Creates the New Woman

230 UPPER TOOTING ROAD,
LONDON SW17 7EW

Tel : 020 8767 3445

வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்

சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் வடிவமைக்கப்பட்டு வாசன் அச்சகத்தினரால் ( Tel: 0208 646 2885)
இலண்டனில் அச்சிடப்பட்டு, சைவ முன்னேற்றச் சங்கத்தால் 20.10. 2001 அன்று வெளியிடப்பட்டது.